“உங்களுடைய சமூக அமைப்பை மாற்றினால் ஒழிய, நீங்கள் முன்னேறவே முடியாது என்பது என் கருத்து. தாக்குதலுக்கோ, தற்காப்புக்கோ சமூகத்தை ஒன்றுதிரட்ட உங்களால் முடியாது. சாதி என்கிற அஸ்திவாரத்தின் மீது எதையுமே உங்களால் கட்டமுடியாது. ஒரு தேசத்தை உங்களால் உருவாக்க முடியாது. உயர்ந்த ஒழுக்க நெறிகளையும் உருவாக்க முடியாது. சாதியை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் உருவாக்குகிற எல்லாமே உருக்குலைந்து போகும்... முழுமை அடையாது.”

- அண்ணல் அம்பேத்கர்

# வடு

சாதிய 'வடு' அகற்றிடத் துணிந்த நெடும் பயணம் இது..!

இதழ்: 23 ஜூன் - 2015 விலை: ரூ 20/-

වඩු - VADU




## தகர்ப்பதற்கு அடிமை விலங்குகளைத் தவிர சாதியும் இருக்கிறதே!

என்பதை தொடர்ந்தும் எமக்கு நினைவுறுத்துகிறது ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாசாலை குடிநீரில் விசம் கலக்கப்பட்ட சம்பவம்.

வெளியீடு: இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி - பிரான்ஸ்



# "வடு" வின் பார்வையில்

நிர்வாக ஆசிரியர்
விதன்யா விநோ

பிரதம ஆசிரியர்
விஜி

ஆசிரியர் குழு
தேவதாசன்
யோகரட்ணம்
அருந்ததி
சுந்தரலிங்கம்
அசுரா

வெளியீடு
இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி பிரான்ஸ்

தொடர்புகளுக்கு
"VADU"
F.D.S.D.S
70 SQUARE
DES BAUVES
95140 GARGES
LESGONESSE
FRANCE

'வடு'23-யூன்2015

vadu.world@hotmail.fr
**www.thuuu.net**

## செல்வி வித்தியாவிற்கான அஞ்சலியுடன்.....

இலங்கையின் கறைபடிந்த வரலாற்றுப் புள்ளிகளில் 2015 மே13 என்பதும் ஒரு துயர்தரும் நாளாக பதிவாகியுள்ளது. செல்வி வித்தியா சிவலோகநானுக்கு நிகழ்ந்த கொடுமை இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களையும் வாட்டி வதைக்கும் ஒரு சம்பவமாக நிகழ்ந்து முடிந்துள்ளது. ஒன்பது காடையர்கள் சேர்ந்து வித்தியாவை சிதைத்து கொலை செய்துள்ளனர். பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை தொடர்ச்சியாக இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் நடைபெற்ற வண்ணமாகவே தொடருகின்றது. அதில் பல சம்பவங்கள் மறைக்கப்பட்டும், அவைகளுக்கு எதிரான கண்டனங்கள் பெரிதாக நிகழாமலும் இருந்திருக்கிறது. பிற பெண்களுக்கு நிகழ்ந்த வன்கொடுமைகளையும் வித்தியாவிற்கு நிகழ்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவத்திற்கு எதிராக கிளர்ந்த நாடுதழுவிய கண்டனப் போராட்டங்களையும் அவதானிக்கும் சிலதரப்பினர், இதில் பாரபட்சம் காட்டப்படுவதாக கருதுகின்றனர். இவ்வாறான பாகுபாட்டுப்பார்வை என்பது குறுகிய அரசியல் நோக்கம் கொண்டதாகவே கருதமுடியும். காலம், சூழல், ஜனநாயகவெளி, போன்ற பல்வேறு புறநிலை காரணங்கள் வித்தியாவின் கொலைக்கு எதிராக எழுந்த கிளர்ச்சிக்கு வாய்ப்பாக அமைந்திருக்கிறது. எனவே இவ்வாறான இனம் மதம் மொழி வேறபாடு இன்றி நாடுதழுவிய சுயஎழுச்சிப் போராட்டத்தை அனைவரும் வரவேற்பதோடு, இவ்வாறான போராட்ட முறைமையை தொடர்ச்சியாக தக்கவைக்கவும் முயலவேண்டும்.

வித்தியாவை சிதைத்து படுகொலை செய்த குற்றவாளிகளுக்கு எவ்வித விசாரணையும் இன்றி மரணதண்டனை வழங்கவேண்டும் என்கிற கோசத்தோடு சில குழுவினர் வன்முறையில் தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதையும் நாம் வன்மையாக கண்டிக்கிறோம். மரணதண்டனை வழங்குவதன் ஊடாக வித்தியாவிற்கு நிகழ்ந்த கூட்டுப் பாலியல் வன்கொடுமை பிற பெண்களுக்கும் நிகழாது என்கின்ற எவ்வித உத்தரவாதமும் இல்லை. இவ்வாறான பெண்கள் மீதான வன்கொடுமைகள் இலங்கை, இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ் மட்டும் அல்ல அனைத்து நாடுகளிலும் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது. குற்றவாளிகளுக்கு விதிக்கப்படும் கடும் தண்டனைகளுக்கும் அப்பால் அவர்கள் தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்கள். இவ்வாறான சம்பவங்கள் ஏன் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. இதற்கு சமூகம் எவ்விதத்தில் துணைபோகிறது. இதற்கான தனிநபர்-குடும்பம் சார்ந்த பின்னணிகள் என்ன. குற்றவாளியின் பண்பாட்டு-கலாசார-உளவியல் பலவீனங்கள் வன்முறைக்கு காரணமாக அமைகிறதா, போன்ற மானுடவியல்-மனிதவியல் சார்ந்த அம்சங்கள் உள்ளது. எனவே சமூகவியல், உளவியல் நிபுணர்களூடாகவும் குற்றவாளிகள் விசாரிக்கப்பட வேண்டும். பாலியல் உறுவுகள் தொடர்பாகவும், அதன் விளைவுகள் தொடர்பாகவும் மாணவர்கள் அறியும் வகையிலான கல்வி முறை எதிர்காலத்தில் நடைமுறைக்கு வரவேண்டும்.

**தொடர்ச்சி 4ஆம் பக்கம்**

# “தண்ணீரில் நஞ்சு கலப்பதற்காக தாழ்த்தப்பட்ட மக்களின் பாடசாலை தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னணி என்ன?”

-சோனியா-

**இவை ஏழாலை சமூக கள ஆய்வில் பெறப்பட்ட தகவல். ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய நிர்வாகத்தின் மேலதிக தகவலை “வடு” விற்கான சோனியாவின் நேர்காணலிலும் அறியலாம்**

சாதிய மேலாதிக்க சிந்தனை நஞ்சு வைக்கும் அளவு சென்றது என்பது, மனித உயிர்கள் மீதான அக்கறை குறித்து பேசிவரும் இன்றைய உலகை உலுக்கிய ஒரு சம்பவம். நேருக்கு நேராக சாதிய மேலாதிக்கத்தை எதிர்கொள்வது சுலபமானது. ஆனால் கோழைத்தனமான இச்செயலை எவ்வாறு எதிர்கொள்வது.

“தாழ்த்தப்பட்டவர்களின் பிள்ளைகள் தானே செத்தால் நமக்கென்ன” என்ற மனப்பாங்குதானே. யாழ் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் தெரிவு செய்யப்பட அடிப்படைக்காரணமாக அமைந்திருக்கிறது.



இதற்காக பல்வேறு காரணங்கள் கூறப்படலாம். அது அரசியலாக இருக்கலாம், தனிப்பட்ட பிரச்சனையாக இருக்கலாம். எதுவாகிலும் ஒடுக்கப்படும் சமூகத்தவர்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலை ஒன்று நஞ்சு கலப்பதற்காக தெரிவுசெய்யப்பட்டதென்பது சாதிய வெறியின் பிரதிபலிப்பாகவே கருதமுடியும்.



இங்கு ஒடுக்கப்படும் சமூகத்தைசேர்ந்த மாணவர்களே கல்வி கற்கின்றனர். ஒடுக்கப்படும் மக்களுக்கான கல்வி மறுக்கப்பட்டும், ஒடுக்கும் சாதியினருக்கான பாடசாலைகளில் தாழ்த்தப்பட்டவர்கள் கல்வி கற்க முடியாத சூழ்நிலைகள் இருந்தது ஒரு காலம். இவ்வாறான நிலையில் ஒடுக்கப்பட்ட சமூகத்தவர்களின் கல்வியின் அவசியம் கருதி அச் சமூகத்தைச் சேர்ந்த குருநாதி - மூத்தவி என்பவரால் 1955ம் ஆண்டு பாடசாலை நிறுவப்பட்டது. அப் பாடசாலைக்கு ஸ்ரீ முருகன் என பெயரிட்டதோடு அக் கிராமத்திலுள்ள படித்த அனைவரையும், அதிபராகவும் ஆசிரியர்களாகவும் நியமித்து கல்வி செயற்பாடுகளை முன்னெடுத்தார். அன்றைய வளர்சியோடு இன்று தரம் 01 தொடக்கம் தரம் 11 வரை வளர்ந்து 800 – 1000 ற்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட கல்விக்கூடமாக விளங்குகின்றது. விளையாட்டுத்துறையிலும், ஏனைய கல்வித் துறைகளிலும் பிற பாடசாலைகளுக்கு நிகராக முன்னேற்றமடைந்தும் வருகின்றது.

19-03-2015 அன்று காலை யாழ் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் தாகத்தில் தண்ணீர் அருந்திய மாணவர்கள் மயக்கமடைந்து வீழ்ந்தனர். கிணற்றுத்தண்ணீருக்குள் ஒயில் கலந்த காரணத்தால் யாரும் அக் கிணற்று நீரை பருகுவதில்லை. அதன் காரணமாக ஒவ்வொரு பிரதேச சபைகளும் தண்ணீர் தாங்கிகளை குறித்த பிரதேசங்களில் வைத்துள்ளனர். பிரதேச சபைகளுக்கிடையிலான அரசியல் மோதல் காரணமாகவே பாடசாலை நீர்தாங்கியில் நஞ்சுகலக்கப்பட்டது என்பது செய்தியாக பரவலாக்கப்பட்டிருக்கின்றது. பாடசாலை நீர்த்தாங்கியில் நஞ்சுப் போத்தலின் மூடியை இலேசாக திறந்து போத்தலுடனே போடப்பட்டிருக்கிறது.




இப்பாடசாலைக்கு அருகில் வேறு சமூகத்தை (சாதியை) சேர்ந்தவர்கள் இருந்தும்

இப்பாடசாலையில் படிப்பதில்லை. குறித்த சமூகத்தைச் சேர்ந்தவர்களே கல்வி கற்கின்றனர். இக் கிராமத்தைச்சுற்றி ஏழு பாடசாலைகள் உள்ளன. இந்த பாடசாலையின் மாணவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச்சார்ந்தவர்களாக காணப்பட்டாலும் அதிபர் ஆசிரியர்கள் பிற சமூகத்தைச்சார்ந்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.



இக்கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கல்லடிக்கும் தொழிலையும், மேசன், கிணறுவெட்டும் தொழில்களென நாளாந்த கூலிகளாக வாழ்க்கையை நகர்த்துபவர்கள். இருந்தும் தமது பிள்ளைகள் தம்மைப்போல் கூலிவேலை செய்யாது கல்வி கற்று தொழில் தேடவேண்டும் என்பது அப்பெற்றோர்களின் கனவு.

இதனால் பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் அதிக கவனம் எடுக்கின்றனர். அக்கிராமத்தின் விளையாட்டுக் கழகமும், வாசிகசாலையும் மிகவும் வளர்ச்சியுடையதாக காணப்படுகின்றது. அவ்விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொள்வதற்கு வேறு அணியில்லை என்ற பெருமையுடையவர்களாகவும் காணப்படுவதுடன் வீதி அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்பட்டு மிகவும் வளர்ச்சியுறும் கிராமமாக மாறிவருகின்றது. ஆனால் இக்கிராமத்து வளர்ச்சியை சகிக்காத சக்திகள் திட்டமிட்டு மதுப்பாவனையை விநியோகிப்பதாக இக்கிராமத்து மக்கள் விசனம் தெரிவித்தனர்.



இப்பாடசாலை தண்ணீர் தாங்கியில் நஞ்சு கலந்த விடயத்தை கண்டிக்கும் முகமாக பல்கலைக்கழக மாணவர்களின் முயற்சியில் ஆயிரக்கணக்கான கிராம மக்கள் இணைந்து ஒரு பேரணியை நடத்தி தமது கண்டனங்களையும் தெரிவித்தனர். “நஞ்சு கலந்தவர்களை கண்டுபிடி” “எமது நீரைச்சுத்திகரித்து கொடு” “நீர் தாங்கி நீர் நமக்கு வேண்டாம்” என பல வாசகங்கள் கொண்ட அட்டைகளை தாங்கியவண்ணம் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.



அன்றைய டானியல் அவர்களின் ‘தண்ணீர்’ நாவலின் சமூக சாதிய உள்ளடக்கம் இன்றும் தொடரும் நிலையிலேயே எமது சமூகங்கள் காணப்படுகிறது. அன்றைய சமூகங்களில் நேரடியாக அடிமைத்தனத்தை மேற்கொண்டிருந்தனர். ஆனால் தற்போது நவீனமாக அதன் தன்மைகள் அரசியல் சாயத்துடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இப்பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பலத்தைப்பெற வேண்டிய நிர்பந்தத்தில் பிற்படுத்தப்பட்டமக்கள் உள்ளனர். நஞ்சு ஊற்றப்பட்டது ஒரு சம்பவமே. ஆனால் பின்னணியின் முழு வடிவம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. கண்டுபிடிக்கவேண்டும் என்ற உத்வேகம் தலித் மக்கள் என்பதால் ஆமை வேகத்தில் பயணிக்கிறதா என்பதும் கேள்விக்குரிய விடயமாகவே உள்ளது □

## 2ஆம் பக்க தொடர்ச்சி

வித்தியாவிற்கு நிகழ்ந்த சம்பவத்திற்கு தண்டனையாக; சமூகவிரோதிகள், துரோகிகள் எனும் காரணம் கூறப்பட்டு மின்கம்ப தண்டனைகள் வழங்கப்பட்டு வந்த ஆயுதகலாசாரத்திற்கு மீண்டும் திருப்ப முனைந்த சக்திகளின் முயற்சிகள் முறியடிக்கப்பட்டிருப்பதையும் நாம் வரவேற்கிறோம்.

## கவனத்திற்கு உள்ளாகிவரும் சாதியம் குறித்த உரையாடல்கள்.

தலித்துக்கள் மட்டுமே கல்விகற்றுவரும் ஏழாலை ஸ்ரீ முருகன் பாடசாலை குடிநீரில் நஞ்சு கலந்த சம்பவத்தின் விளைவாக சாதியம் குறித்த பல்வேறு உரையாடல்கள் புகலிடத்தில் நிகழ்ந்தது. சமூக அக்கறையுடையோர் அரசியல் ஆய்வாளர்கள் என பலர் இவ்விடயம் குறித்து தொடர்ந்து பேசிவருகின்றனர். பிரான்சில் ஒலிபரப்பாகும் ரி.ஆர்.ரி எனும் இணைய வானொலி ஊடாக சாதியம் குறித்த உரையாடல்கள் நடைபெற்றது. “இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பாக பேசிவருபவர்கள் எமது சமூகத்தில் நிலவும் சாதியப் பிரிவினை குறித்து தொடர்ந்தும் மௌனமாக இருக்கமுடியுமா?” எனும் கேள்வியை முன்வைத்து கலந்துரையாடல்கள் நடைபெற்றது. இவ்வுரையாடலில் அரசியல் ஆய்வாளர்களான சிவலிங்கம், ஜெகநாதன், இராஜாகரன் உட்பட பலர் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர். அவ்வுரையாடல்களில் இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் செயல்பாட்டாளர்களான தேவதாசன், யோகரட்ணம் ஆகியோரும் பங்குபற்றினார்கள். இவ்வாறான வெகுஜன ஊடகங்களில் சாதியம் குறித்து உரையாட முன்வரும் தரப்பினரை இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய நாம் பாராட்டுகின்றோம். □

# -தலித் மாணவர்கள் மீதான கூட்டுப்படுகொலை சதியை மிக வன்மையாக கண்டிக்கின்றோம்-

## இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி- பிரான்ஸ்- 22-03-2015

யாழ்.ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தில் மாணவர்கள் பருகும் நீரில் விஷம் கலக்கப்பட்ட கொடூரம் நிகழ்ந்துள்ளது. கடந்த வியாழன் 19-03-2015 அன்று விஷம் கலந்த நீரை பருக நேர்ந்த அப்பாடசாலையின் 27 மாணவர்கள் உரிய நேரத்தில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமையினால் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

பச்சிளம் பாலகர்களை கொலை செய்ய முனைந்த இந்த மிருகத்தனமான செயலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் உள்ள தலித் மாணவர்களை குறிவைத்தே இந்த சதிசெயல் திட்டமிடப்பட்டிருக்கின்றது என்பதை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய நாம் பகிரங்கமாக உறுதி செய்கின்றோம்.

இதுவரை காலமும் வெறும் ஐந்தாம் தரம் மட்டுமே கல்வியை வழங்கி வந்த இப்பாடசாலையானது 2001ம் ஆண்டே தரமுயர்த்தப்பட்டிருந்தது. அதன்காரணமாக காலாகாலமாக கனிஷ்ட கல்வி மறுக்கப்பட்டுவந்த இப்பிரதேச தலித் மாணவர்கள் கடந்த சில ஆண்டுகளாக தரம் 11 வரை கல்வி கற்கும் வாய்ப்பை பெற்றனர். தலித் மாணவர்களின் இந்த வளர்ச்சி போக்கு இப்பிரதேச ஆதிக்கசாதியினரிடத்தில் பெரும் பொறாமை தீயை ஏற்படுத்தியிருந்தமையை நாம் அறிந்திருக்கின்றோம். மரமேறுதல், சிகையலங்காரம், மீன்பிடித்தல் போன்ற குலத்தொழில்களை மெதுமெதுவாக கைவிட்டு வேறு தொழில்களை நாட இப்பிரதேச இளைஞர்களுக்கு இந்த பாடசாலையின் வளர்ச்சி கைகொடுத்து உதவியமை முக்கியமானதொன்றாகும். இந்த பின்னணிகளை விடுத்து தலித் மாணவர்கள் மீதான இக்கொடூரத்தின் காரண காரியங்களை அடையாளம் காண முடியாது என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம். வெறும் சாதிய அடையாளங்களையும் ஆதிக்க திமிர்களையும் மட்டுமே கட்டிக்காக்கின்ற யாழ்ப்பாண கலாசாரத்தின் வரலாற்று தொடர்ச்சியில் தலித் மக்களை குறிவைத்து நடத்தப்படுகின்ற இதுபோன்ற தண்ணீர் சார்ந்த அட்டூழியங்கள் ஒன்றும் புதிதல்ல. தலித்துகளின் தீட்டுகளை துடைக்க கிணறுகளையே இடித்தொழித்த சம்பவங்களும், யுத்தகால இடப்பெயர்வுகளின் போது தலித்துகள்



பாவித்து விடக்கூடாதென்பதற்காக கிணறுகளுக்குள் மண்ணெண்ணெய் ஊற்றியும், இறந்த நாய்களையும் பூனைகளையும் கூட கிணறுகளுக்குள் வீசிவிட்டும் சென்ற சாதிமான்களின் சாதனைகளையும் இவ்விடத்தில் தமிழ் பேசும் நல்லுலகுக்கு நினைவூட்ட விரும்புகின்றோம். தலித்துகளுக்காக உருவாக்கப்பட்ட பாடசாலைகளையும் வாசிகசாலைகளையும் தீயிட்டு கொளுத்தி தற்பெருமை கொண்ட யாழ்ப்பாண மண்ணில் எப்படி இந்த ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளின் அடிப்படையில் தலித் மாணவர்களின் இந்த பாடசாலை தெரிவு செய்யப்பட்டது? தமது அரசியல் பழிவாங்கலுக்கு மிக இலகுவான இலக்காக ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படை என்ன? என்கின்ற கேள்விகளுக்கு யாரிடம் விடையுண்டு? அதுவே சாதியத்தின் கொடூரம். கேட்பார் பார்ப்பார் இன்றி நாதியற்று கிடக்கும் தலித் சமூகம் மேட்டுக்குடிகளின் அரசியல் காய் நகர்த்தலுக்கு பலிக்கடாக்கள் ஆக்கப்பட்டிருக்கின்றது என்பதை யாரும் மறுக்க



வளர்ச்சி நிலைத்து நிற்க முடியும்?
இந்த சமூக யதார்த்தங்கள் அனைத்தையும் மறைத்து தலித் மாணவர்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நிகழ்த்தப்பட்ட இந்த ஆதிக்க சாதி வெறியாட்டத்துக்கு வெவ்வேறு காரணங்களை கற்பிக்க முனைகின்ற ஊடகங்கள் அனைத்தையும் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். அரசியல் போட்டியும் பழிவாங்கலுமே இந்த நாசகார செயலுக்கு காரணம் என உண்மைகளை ஆழ நோக்காமல் மேலெழுந்த வாரியாக இச்சம்பவத்தினை நாம் இலகுவாக கடந்து செல்ல முடியாது. இந்த நச்சூட்டல் வெறித்தனத்தில் இருக்கின்ற ஆதிக்க சாதி மனோபாவத்தை மறைத்து அதனை பூசி மெழுகி திரிபுபடுத்தும் முனைப்புகள் ஆதிக்கசக்திகளை காப்பாற்றும் குள்ளத்தனங்களின் வெளிப்பாடுகள் ஆகும். இந்த நஞ்சூட்டல் வெறியாட்டம் அரசியல் போட்டி காரணமானதாகவோ, மாணவர்களுக்கு நீர் வழங்கும் பிரதேச சபையை பழிவாங்கும் முயற்சி என்பதாகவோ இருக்கலாம். அதுவே உண்மையானாலும் கூட குறித்த பிரதேச சபையின் கீழ் இருபதுக்கும் மேற்பட்ட பாடசாலைகள் இயங்குகின்ற வேளையில் ஏன் இந்த பாடசாலைதான் அதற்கான தெரிவாக வேண்டும் என்கின்ற கேள்வியை நாம் எழுப்ப முனைகிறோம்? எந்தவொரு அரசியல்வாதி யாரொருவரையேனும் பழிவாங்கும் நோக்கில் இந்த செயலுக்கு உத்தரவிட்டிருந்தாலும் எந்த முடியாது. யுத்தகால இன முரண்பாடுகளுக்கு மத்தியில் இரண்டாம் பட்சமாக்கப்பட்டு கிடந்த ஆதிக்க சாதி வெறித்தனங்கள் இப்போது மீண்டும் அரங்கேறி வருவதனை இச்சந்தர்ப்பத்தில் நாம் கோடிட்டுக்காட்ட விரும்புகின்றோம். யுத்தத்துக்கு பின்னரான காலத்தில் வடமாகாணமெங்கும் இடம்பெற்று வருகின்ற இளைஞர், யுவதிகளின் தற்கொலைகளிலும் புதுமண தம்பதிகளின் வேகமான விவாக ரத்துகளிலும் கோஸ்டி சண்டைகளிலும் அதிகளவில் சாதிய கொடுமைகளே கூடிய தாக்கம் செலுத்தி வருவதை நாம் புறம் தள்ளிவிட முடியாது. குறிப்பாக வடமாகாண சபையின் சைவ வேளாள ஆட்சி உருவானதன் பின்னர் மரபு, கலாசாரம், பண்பாடு போன்றவற்றின் பெயரில் நல்லூர் ஆறுமுகம் வழிவந்த சாதிய கட்டுமானங்கள் உத்வேகம் பெற்று வருவதன் வெளிப்பாடுகளே இதுவென நர்ம் அஞ்சுகின்றோம்.

எனவே இந்த "தலித் கூட்டுப் படுகொலை சதி" யை மிக வன்மையாக கண்டிப்பதோடு இந்த கொலை குற்றவாளிகள் கண்டு பிடிக்க படுவதற்கும் தண்டிக்கப்படுவதற்கும் ஏதுவாக இலங்கையின் போலிஸ் மற்றும் நீதித்துறை பாரபட்சமற்ற விசாரணைகளை முடுக்கிவிட வேண்டுமென தலித் சமூக மேம்பாட்டு முன்னணி பகிரங்க வேண்டுகோளை விடுக்கின்றது. □

# பாடசாலையில் நஞ்சு கலந்ததன் பின்னணி..., அரசியல் முரண்பாடா? தனிநபர் பகையா? எதுவாக இருப்பினும் ஒடுக்கப்படும் சாதியினரின் பிள்ளைகள் குறிவைக்கப்பட்டதன் நோக்கம் என்ன?

**ஸ்ரீ முருகன் ஏழாலை சனசமூக நிலையத்தின் தலைவர் வைரவநாதன் யோகேந்திரன் மற்றும் செயலாளர் கந்தையா நாகராசா அவர்களுடனான நேர்காணல்.**

**சோனியா**: ஸ்ரீ முருகன் பாடசாலையில் நஞ்சு கலந்த சம்பவம் பற்றியும் அதன் பின்னணி குறித்த உங்கள் அபிப்பிராயம்?

1955ம் ஆண்டு குருநாதி - மூத்தவி என்பவரால் (வைரவநாதன் யோகேந்திரனின் பேரன்.) இப்பாடசாலை நிறுவப்பட்டது. அப்போது சொர்ப்ப மாணவர்களே கல்வி கற்றனர். ஆனால் இன்று கிட்டதட்ட 1000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். தரம் 01 முதல் 11 வரை கல்வி கற்கும் அளவிற்கு இன்று வளர்சியடைந்துள்ளது. கல்விச்செயற்பாடுகளுடன் விளையாட்டிலும் இதர செயற்பாடுகளிலும் இப்பாடசாலை மாணவர்கள் முன்னணியில் நிற்கின்றனர். ஆரம்பத்தில் எங்களின் சமூகத்திலிருந்தே ஆசிரியர்களும் அதிபரும் நியமிக்கப்பட்டு வந்தனர். இப்போது வேறு சமூகத்தை சேர்ந்தோரே கல்வி கற்பிக்கின்றனர். அதிபர் வேறு சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் மாணவர்களின் உயிரில் அக்கறை இன்றி வெறும் கடமைக்காக தொழில் புரிபவர்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. அந்த சந்தேகத்திற்கான ஒரு சின்ன உதாரணம்: நாங்கள் நஞ்சு கலந்ததிற்கு எதிராக பேரணி ஒன்றை நடத்த அடுத்த நாள் ஆயத்தம் செய்ய சொல்லிக் கேட்டிருந்தோம். ஓம் என்று சொல்லிவிட்டு எந்த ஆயத்தமும் செய்யவில்லை என்பதுடன் அவர் அந்தப் பேரணியில் கலந்து கொள்ளவும் இல்லை. வகுப்பாசிரியர் ஒருசிலரே கலந்து கொண்டனர்.



பிள்ளைகளை நாங்களே ஒன்றுதிரட்டி பேரணியை நிகழ்த்தியிருந்தோம். கிணற்று நீரில் ஒயில் தன்மை கலந்ததனால் பிரதேச சபைகளினால் நீர்தாங்கிகள் வைக்கப்பட்டு நீர் நிரப்பப்பட்டு வருகிறது. ஏதோ ஒரு அரசியல் பின்னணியே இச் செயற்பாட்டிற்கு வழிவகுத்திருக்கிறது என்று நினைக்கிறோம். ஆனால் அதற்காக எமது கிராமத்து பாடசாலை ஏன்தெரிவு செய்யப்பட்டது என்பது இன்னும் கேள்வியாகவே உள்ளது. இக்கிராமத்தில் ஏழு பாடசாலைகள் உண்டு.

அங்கு எல்லாச்சமூகத்தினரும் கல்வி கற்கின்றனர். இப்பாடசாலையில் குறித்த ஒடுக்கப்படும் சமூகத்தைச் சேர்ந்தவர்களே கல்வி பயில்கின்றனர். ஏனைய சமூகத்தினர் எமது பாடசாலையில் பிள்ளைகளை



சேர்ப்பதில்லை. இப்போது ஒருவர் நஞ்சு கலந்தவர் என்ற சந்தேகத்தில் பிடிக்கப்பட்டுள்ளனர். அவர் எந்தக்கட்சி என்று இல்லாமல், மக்களுக்கு சேவைசெய்யும் நோக்கமும் இல்லாமல் தனது சொந்த நலனுக்காக எதுவும் செய்யும் ஒரு நபர். அவர்தான் நஞ்சு கலந்திருந்தால் அவருக்கு குறைந்தது 10 இலட்சமாவது கொடுத்துதான் இந்தகாரியத்தை யாரும் செய்திருக்ககூடும். எமது சாதியைச் சேர்ந்தவன்தான் இக்கொடுமைக்கு துணைபோயிருக்கிறான். அவன் காசுக்காக எந்தவேலையும் செய்யத்துணிபவன். எப்படியும் இவன் போதையில்தான் இந்த வேலையை செய்திருப்பான். பொலிஸ் பிடித்துவைத்துள்ளவன் பற்றி எதுவுமே சொல்லவில்லை. கேட்கும் போது விசாரணை நடைபெறுகிறது என்றே சொன்னார்கள்.

**சோனியா**: நஞ்சு கலந்த நாளில் மாணவர்களின் நிலமை எவ்வாறு இருந்தது?

27பிள்ளைகள் . நஞ்சு கலந்த நீரைக்குடித்து மயங்கிவிழுந்தனர். உடனே நாங்கள் எங்கள் சொந்த வாகனங்களில் ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றோம். உண்மையில் வைத்திய சமூகத்திற்கு நாம் நன்றி சொல்ல வேண்டும். வைத்தியர்கள் உடனே அவசரசிகிச்சை அளித்து 03 மணித்தியாலத்தில் பிள்ளைகள் சாதாரண வாட்டிற்கு மாற்றப்பட்டனர். அதில் மூன்று பிள்ளைகளின் நிலமை சற்று ஆபத்தான நிலையில் இருந்தது. பின்னர் அடுத்தநாள் அவர்களும் சுகமடைந்தனர். தெய்வாதீனமாய் குழந்தைகள் அனைவரும் காப்பாற்றப்பட்டனர். ஒரு குழந்தைக்காவது ஒன்று நடந்திருந்தால் என்ன நிலை. யார் பதில் சொல்வது.? பாடசாலை நீர்தாங்கி றோட்டிற்கு கிட்டவே இருந்தது. நஞ்சுப் போத்தலின் மூடியை லேசாக திறந்து அப்படியே போத்தலுடன் போடப்பட்டிருக்கிறது. தாங்கியில் முக்கால்வாசி தண்ணியிருந்ததனால் நஞ்சின் தன்மை குறைவாகத்தான் இருந்திருக்கவேண்டும்.

திறந்து ஊற்றியிருந்தால் ஒருபிள்ளைகளையும் மீட்டிருக்கமுடியாது. பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியை பாதிப்படைய வைக்கும் நோக்கமும் இருந்திருக்ககூடும். யாரின் தூண்டுதலில் இது நடந்தது என்பதை கண்டுபிடித்தாலே உண்மை வெளிக்கும்.

**சோனியா**: உங்கள் சமூகத்தின் இன்றைய நிலமை குறித்து கூறமுடியுமா?

இக்கிராமத்தில் ஒடுக்கப்படும் சமூகத்தை சேர்ந்த 700 குடும்பங்கள் வாழ்கின்றனர். வாசிகசாலை, விளையாட்டுக்கழகம், பாடசாலை என சமூக மேம்பாட்டிற்குரிய அம்சங்களைக் கொண்ட ஒரு கிராமம். எமது கிராமத்து விளையாட்டுக்கழகத்தை வெல்வதற்கு இங்கு வேறு அணிகள் இல்லை என்றே கூறலாம். எங்கட விளையாட்டுக்கழகமே உடுவில் கோட்டத்தில் பலமுறை முதலாவது இடத்தை தக்கவைத்திருக்கின்றது. இப்போது எமது வீதிகள் புனரமைக்கப்படுகிறது. எங்கள் சமூகத்தைச்சேர்ந்த இருவர் தேர்தலில் நின்றனர். இருகட்சிகள் சார்ந்து கேட்டனர். ஒருவர் எமது கிராமத்திற்கென எதுவுமே செய்யவில்லை. மற்றொருவர் எமது கிராமத்திற்கான வீதி அபிவிருத்திகளை செய்துள்ளார். கல்லடித்தல், மேசன் வேலை, கிணறு வெட்டுதல், காணி திருத்துதல், கூலி வேலைக்கு செல்லுதல், அரச உத்தியோகம் என்பதே எமது கிராம மக்களின் தொழில்களாக உள்ளது. 60வீதமானவர்கள் அன்றாட கூலிகளாகவும், 10வீதத்திற்கும் குறைந்தவர்களே உத்தியோகம் பார்க்கும் நிலமையும் உள்ளது. அத்துடன் வாகன உரிமையாளர்களாகவும் உள்ளனர். கன்ரர், ரைக்ரர், ஹயேஸ் போன்ற கனரக வாகனத்தின் உரிமையாளர்களாக பல குடும்பங்கள் உள்ளனர்.

அத்துடன் அநேகமானவர்களின் வீட்டிலுள்ள பிள்ளைகள் வெளிநாடுகளிலும் வேலைசெய்து வருகின்றனர்.

**சோனியா**: தண்ணீரில் நஞ்சு கலந்தமைக்கு எதிராக உங்களின் நடவடிக்கை எப்படி அமைந்தது?


யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களே வந்து பேரணி ஒன்றை நடத்தவேண்டும் என கூறி அடுத்தநாள் எல்லாமக்களையும் ஒன்று திரட்டுமாறு கேட்டுக்கொண்ணடனர். இரவோடு இரவாக ஆட்டோவில் ஸ்பீக்கர் கட்டி எல்லாமக்களுக்கும் அறிவிக்கப்பட்டது. அடுத்தநாள் ஆயிரம் பேரிற்கும் மேல் கலந்து கொண்டு சுண்ணாகம் பஸ்நிலையம் வரை சென்று பேரணியை முடித்துக்கொண்டோம். அனைத்து அரசியல் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். ஆனால் எந்த கட்சி உறுப்பினர்களையும் பேச அனுமதிக்கவில்லை. நாங்களே எமது கோரிக்கைகளை முன்வைத்து கவனயீர்ப்பை செய்தோம். பல்கலைக்கழக மாணவர்களே இதற்கு ஆதரவு வழங்கினார்கள். அத்துடன் டான் தொலைக்காட்சியில் நாம் பேட்டிகொடுத்திருந்தோம். இப்படியான நாசகார செயலைச் செய்தவனை தண்டி என்று கோரிக்கைவிடுத்திருந்தோம். பேட்டியில் பலபேர் தொடர்புகொண்டு தமது கருத்துக்களையும் கண்டனங்களையும் தெரிவித்தனர். அதில் ஒருவர் கேட்டிருந்தார் ‘உங்கள் சமூகத்தைப்பற்றி நான் அறிந்தவன். உங்கள் சமூகத்தில் குடிப்பவர்களும் குடிக்கு அடிமையானவர்களும் உள்ளனர். இப்படி இருப்பதால்தான் இது நடந்ததா?’ என்று. அதற்கு நான் இவ்வாறு பதிலளிததேன்: ‘உங்கள் கிராமத்தில் எந்தவொரு மதுபானக் கடைகளும் இல்லையா? அதோடு உங்கள் சமூகத்தில் குடிப்பவர்கள் எவருமே



ஸ்ரீ முருகன் சன சமூக நிலையம்

இல்லையா? அவ்வாறு உங்கள் சமூகத்தவர்கள் எவருமே குடிப்பழக்கம் இல்லாததால்தான் உங்கள் பாடசாலை கிணறுகளில் நஞ்சு கலக்கவில்லை!! நாங்கள் குடிப்பழக்கம் உள்ளவர்கள் என்பதால்தான் இது நடந்திருக்கிறது அப்படித்தானே’ என்றேன். தவறான அபிப்பிராயங்களை எங்கள் மேல் வைத்துள்ளனர். ஒடுக்கப்படும் சாதியினர் மட்டுமே குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டவன் என்றும், குடித்து மதிமயங்கி செயல்படுபவர்கள் என்றும் கருதுகின்றனர். அது எவ்வளவு தவறான அபிப்பிராயம். எல்லா சமூகங்களிலும் தானே குடிக்கிறார்கள். மதுக்கடைகளை வைத்திருப்பவர்கள்தானே பணக்காரவர்க்கமாக உள்ளனர். இதனை ஏற்றுக்கொள்ள சில சமூகத்தவர்கள் மறுக்கின்றனர். நஞ்சு கலந்தவனை எமது கைகளில் தந்தால் அரபுநாடுகளில் கொடுக்கும் தண்டனையை மக்கள் நாங்களே கொடுப்போம். நாங்கள் இக்காரியத்தின் வேரைக் கண்டுபிடிக்கும் வரை ஓயமாட்டோம். எமக்கான நீதிக்காய் போராடுவோம். □

www.Thuuu.net



# பாடசாலைகளில் இடம்பெறும் முறையற்ற பண அறவீடுகளும் அதனால் திண்டாடும் பெற்றோர்களும்

-எஸ்.நதி-

இலங்கையில் தற்போது புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள மைத்திரிபால சிறிசேனவின் 100 நாள் வேலைத்திட்டத்தில் ஒன்றாக அரச பாடசாலைகளில் கல்வி அனுமதிக்காக மாணவர்களின் பெற்றோர்களிடம் எந்தவகையிலும் பணம் அறவிடக் கூடாதென்ற விடயமும் உள்ளடக்கப் பட்டுள்ளது.

யாழ். நகரை அண்டிய சில பிரபல ஆரம்பப் பாடசாலைகளின் நிர்வாகங்கள் மாணவர்களிடம் இருந்து பணம் அறவிடும் போக்கில் சர்வாதிகாரமான முறையில் நடந்து கொள்வதினால், பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு விரும்பும் பெற்றோர்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர். அண்மைக்காலமாக ஆரம்பப் பாடசாலை அதிபர்களின் பொறுப்பற்றதன்மை மற்றும் மனிதாபிமானமற்ற தன்மை போன்றவற்றால் கல்வியை விலைபேச முற்படும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருவதை காண முடிகிறது.

இந்நிலையில் ஏனைய நாடுகளைப் போல் அல்லாது இலங்கையில் இலவச கல்விமுறைமை அறிமுகப் படுத்தப்பட்டதில் இருந்து அனைவருக்கும் கல்வி என்ற துரநோக்கு வெற்றியளித்துள்ளது. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வருகின்ற மூன்றாம் மண்டல நாடுகளில் கல்வித்துறையானது பின்னடைவை எதிர்நோக்கி வருகிறது. நாட்டின் அபிவிருத்திக் குறிகாட்டிகளுள் முக்கியமானது எழுத்தறிவு வீதமாகும். தற்போது 75வீதத்திற்கும் அதிகமாக இலங்கையில் இருப்பது வரவேற்கத்தக்கதே. எனினும் கல்வி வளர்ச்சி அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தை அடைய முடியவில்லை என்பதே உண்மையாகும்.

காரணம் இலங்கையில் தற்போது உள்ள கல்விமுறை பாரம்பரிய முறையிலிருந்து நவீன முறைக்கு மாறவில்லை, அல்லது மாற முற்படவில்லை என்றே கூற வேண்டும். வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும் போது நம்நாட்டில் கல்வித்துறை பலமடங்கு பின்னிலையிலிருப்பது வெளிப்படையான விடயம். காரணம், கல்வித்துறையில் உள்ள பல குறைபாடுகள். இவ்விடயத்தை இங்கு பிரஸ்தாபித்து விவாதிக்க வரவில்லை. கல்வி கற்பதற்கு அனுமதி கேட்டு வருகின்ற மாணவர்களிடமிருந்து வகைதொகையின்றி கறக்கப்பட்டு வரும் பணம் பற்றியதான விவகாரம் இங்கு முக்கியத்துவப்படுத்தி நோக்கப்படுகிறது.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி கல்வி அடைவுத்திறன் கூடிய பாடசாலைகளிலேயே சேர்ப்பதற்கு முண்டியடிக்கின்றனர். இத்தகைய போட்டி நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தும் அதிபர்கள் நியாயமற்ற விதத்தில் கூடியளவு பணத்தை அறவிட்டு வருவதினால் பெற்றோர்கள் பெரும் விசனமும், கவலையும் அடைகின்றனர். சில பாடசாலை அதிபர்கள், பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதித்த பிறகும் பாடசாலையின் அபிவிருத்திக்காக பணம் தருமாறு கேட்டு மிரட்டுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் இலவசக் கல்வி அமுலில் உள்ள போதும் சில பாடசாலை அதிபர்களது தான்தோன்றித்தனமான செயற்பாடுகளினால் கல்வி பெற முடியாமல் ஏழைப்பெற்றோரின் பிள்ளைகள் பாதிப்படைந்து வருகின்றனர். பாடசாலையின் அபிவிருத்திக்கே நிதிதிரட்டப்படுவதாக கூறப்படினும் பெரும்பாலும் பணத்தை ஆசிரியர்களே கையாடி விடுகின்றனர். ஏனெனில் பணம் வாங்கும் போது எவரிடமும் இவ்விடயத்தைத் தெரிவிக்க வேண்டாம் எனவும் பெற்றோர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர்.

அதுமாத்திரமின்றி பணம் படைத்த பெற்றோர்களை தமது வலையத்துக்குள் வளைத்துப் போடும் இப்புல்லுருவி அதிபர்கள் பெரும்தொகை பணத்தைப் பெற்று அதற்குப் பரிசாக அவர்களது பிள்ளைகளுக்கு அனுமதியைக் கொடுத்து விடுகின்றனர். அதனால் பணபலம் உள்ளவர்களின் பிள்ளைகளுக்கே பெரும் பாடசாலைகளில் படிக்க முடியும் என்ற நிலை ஏற்படுகிறது.

ஏனையோரது பிள்ளைகள் கிராமப்புற பாடசாலைகளுக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. இங்கு கிராமப்புற பாடசாலைகளில் கற்கக் கூடாது என தவறாக எண்ணக்கூடாது. கல்வி உரிமையைப் பொறுத்தவரை இங்கு எல்லோருக்கும் சம உரிமை உள்ளது. தான் விரும்பும் எந்தப் பாடசாலையிலும் கல்வி கற்கக் கூடிய சூழலமைவும் விருப்பமும் ஒவ்வொரு மாணவர்களுக்கும் உண்டென்பதை மறுக்கலாகாது.

மாணவர் அனுமதிக்காக நன்கொடை என்ற பொருளில் சுரண்டப்பட்டு வரும் சுளை சுளையான பணத்துக்கு என்ன நடைபெறுகிறது என்பதற்கான சரியான கணக்கு வழக்குகளும் அதிபர்களால் சரியான முறையில் சமர்பிக்கப் படுவதும் இல்லை விளம்பரப்படுத்துவதும் இல்லை. எல்லாமே இரகசியமாகவே வைக்கப்பட்டு வருகிறது. இதனை தட்டிக் கேட்பதற்கு திராணியற்றவர்களாகவே பெற்றோர்கள் உள்ளனர். தமது பிள்ளைகளுக்கு பாடசாலைகளில் இடம் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

நன்கொடையாக நியாயமான தொகையினை அறவிடலாம். அதுவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கூடாக சரியான நடைமுறைகளுக்கூடாக அறவிட முடியும். ஆனால் தனியே அதிபர்களால் தனிப்பட்ட ரீதியில் இவ்வளவு தொகை செலுத்த வேண்டுமென்று தீர்மானிப்பதற்கு பாடசாலைகள் இவர்களின் தனிப்பட்ட சொத்தல்ல என்பதை இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அதுமாத்திரமின்றி கல்வி கற்கும் மாணவர்களிடமிருந்து தவணைக் கட்டணம் எனும் பெயரில் கறக்கப்பட்டு வரும் பணங்களும் அதிகமாகவே இருக்கின்றன. அப்பணத்திற்கான சரியான கணக்கு விவரங்களும் உரிய முறையில் காட்டப்படுவதில்லை. அதனை கல்வித்திணைக்களங்கள், வலய கல்வி அலுவலகங்கள் கண்டுகொள்வதில்லை. அல்லது கண்டும் காணாதது போல் தூங்கிக் கொண்டு இருக்கின்றன. கல்வி திணைக்கள அதிகாரிகள் தமது கடமைகளை உரிய முறையில் செய்தால் இத்தகைய தவறுகளை சரி செய்ய முடியும். ஆனால் அவர்களும் அக்கடமைகளைச் சரிவர செய்வதில்லை. இவர்களும் அதிபர்களிடம் இலஞ்சம் பெறுகின்றனரா என ஐயுற வேண்டியுள்ளது.

உண்மையில் அரசாங்க பாடசாலைகளில் மாணவர்களை அனுமதிக்காக சேர்க்கும் போது எவ்வித நன்கொடைகளையோ அல்லது அனுமதிக் கட்டணங்களையோ அறவிடக் கூடாதென்றே அரசாங்கச் சுற்று நிருபங்கள் கூறுகின்றன. இருந்தும் இச்சுற்று நிருபங்களை மீறும் வகையில் செயல்படும் அதிபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும். அத்துடன் பெற்றோரும் இவ்விடயத்தில் விழிப்புடன் செயல்பட்டு இத்தகைய அதிபர்களின் முகத்திரையைக் கிழிக்க முன்வரவேண்டும்.

பாடசாலையில் சில அபிவிருத்திப் பணிகளைச் செய்வதற்காக மாணவர்களிடமிருந்து சிறு தொகை பணத்தை உரியவர்களின் அனுமதியுடன் அறவிட முடியும். எனினும் அதற்குரிய வெளிப்படைத் தன்மையும் நீதியும் இருக்க வேண்டும். ஆனால் இத்தகைய பாடசாலைகளில் வெளிப்படைத்தன்மை என்பது கேள்விக் குறியாகவே இருக்கிறது. பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் போன்றவற்றுக்குக் கூட சரியான கணக்கு விபரங்களை அதிபர்கள் தெரிவிப்பது இல்லை. இதனால் மாதாந்தக் கூட்டங்களின் போது பல்வேறு வாதப்பிரதி வாதங்கள் முற்றி இறுதியில் சண்டைகளுக்கே வழிகோலும் சம்பவங்களும் பாடசாலைகளில் நடைபெறுவது கண்கூடு.

இந்தநிலைமையில் கல்வியைப் போதனை செய்யும் குருவானவர்கள் தெய்வத்துக்கு சமமாகவைத்து நோக்குதற்குரியவர்களாவர். சமூகத்துக்கு வழிகாட்டியாகவும் முன்னுதாரணமானவர்களாகவும் இருக்க வேண்டியவர்கள், பணத்திற்காக கீழ்மைத்தனமான செயல்களில் ஈடுபடுவது புனிதமான ஆசிரியத்துவ பணிக்கு ஏற்புடையதாகாது.

முதலில் உன்னைதிருத்து சமூகம் தானாகதிருந்தும் என்ற முது மொழிக்கேற்ப ஒவ்வொருவரும் தன்னளவில் திருந்தி நடக்கமுற்படவேண்டும்.

திருடனாய் பார்த்துதிருந்தாவிட்டால் திருட்டைஒழிக்கமுடியாது என்ற பட்டுக்கோட்டையின் திரைவரிகளை சம்பந்தப்பட்ட அதிபர்களிற்கு காணிக்கையாக்குகிறோம். □



# அபிவிருத்திக்காய் காத்திருக்கும் தலித் கிராமத்து வீதிகள்

வடமாகாணம் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக போர்நிறைந்த பூமியாக காணப்பட்டது. போர் முடிவடைந்து இன்று பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு பெரும்வீதிகள் செப்பனிடப்பட்டு போக்குவரத்து இலகுவாக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே வடமாகாணத்தில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொருளாதார ஆய்வுகள் கூறுகின்றன. பல்வேறு அபிவிருத்திகளுக்கான திணைக்களங்கள் செயல்படவேண்டும். அவற்றின் செயல்பாடுகளும் சேவையும் அனைத்து சமூக பிரிவினருக்கும் கிடைக்கும்போதே அவை உண்மையான அபிவிருத்தியாக கருதமுடியும்.

உட்கட்டமைப்பு வசதிகளான வீதி, வீடு, மலசலகூடம், போன்ற அத்தியாவசிய தேவையே ஒரு சமூகத்தின் இன்றியமையாமைகள். இவைகளே ஒவ்வொரு மனிதனின் அன்றாட வாழ்வின் ஆதாரமான வாழ்விடம், போக்குவரத்து, பாதுகாப்பு, சுகாதாரம், என்பனவற்றுக்கெல்லாம் அடிப்படைகளாக காணப்படுவதுடன் தனிமனித மேம்பாட்டிற்கு உறுதுணையாகவும் அமைகின்றன.



வடமாகாணத்தில் 80 வீதமான பகுதிகள் கிராமங்களைச்சார்ந்தவையாக காணப்படுகின்றன. அதிகமான மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கின்றனர். அவர்கள் கிராமங்களின் இயற்கை எழிலோடு கூடிவாழும் உன்னதமான வாழ்க்கையுடன் ஒன்றியுள்ளனர். இருப்பினும் இம்மக்களுக்கான அடிப்படை வசதிகள் எவ்வளவுதூரம் கிடைக்கிறது என்பது கேள்விக்குரிய விடயமே.

யாழ்ப்பாணத்திலுள்ள பல கிராமங்களில் வாழும் மக்களில் குறிப்பிட்ட சிலரைத் தவிர ஏனைய மக்கள் விவசாயத்தையே நம்பியுள்ளனர். இக்கிராமங்களின் அமைப்பு அம்சங்கள் அபிவிருத்திக்கு தடைகளை ஏற்படுத்தும் விடயங்களாக காணப்படுகிறது. உட்கட்டமைப்பு வசதியான வீதி அபிவிருத்திக்காய் காத்துக்கிடக்கின்றன என்றே கூறவேண்டும். அதிலும் தலித்துக்களின் கிராமங்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகள் தமது சொந்த பந்தங்கள் வாழும் சிறுவீதிகளைக்கூட மேம்படுத்திவிட்டன. ஆனால் தலித் மக்களின் அரசியல் ஆதரவுப் பலமோ மிகவும் பலவீனமாகவே உள்ளது. அதனால் அவர்களால் அபிவிருத்திநோக்கி பயணிக்கமுடியாத நிலைமை உருவாகின்றது. வறுமைக்குள் உழலும் மக்களுக்கு அரசினால் நடைமுறைப்படுத்தும் திட்டங்களும் சென்றடைவதில் தாமதம், அல்லது புறக்கணிப்புக்கள் நிகழ்கின்றது.

இம் மக்களிற்கு பல ஆண்டுகளான பிரச்சனையாக வீதி அபிவிருத்தியின்மை காணப்படுகிறது. இவ் வீதிகள் உருவாகிய காலம் முதல் எவ்வித மாறுதலுமின்றி அதே நிலையில் இருக்கின்றன. இவ் வீதிகளின் அபிவிருத்தியின்மையானது பல்வேறுபட்ட இடர்பாடுகளையும், அசௌகரியங்களையும் இம் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. இம் மக்கள் இவ்வீதியின் சீரின்மையால் எதிர்கொள்ளும் பிரச்சனைகளாக:

### உரிய நேரத்தில் சந்தைப்படுத்த இயலாது பொருட்கள் சேதமடைவது.

இப்பாதையின் ஊடாக தமது விவசாயப்பொருட்களை விற்பனைக்காக சந்தைக்கு கொண்டு செல்லும் போது வீதிகள் குன்றும் குழியுமாக இருப்பதால் விரைவாக கொணடு செல்ல முடிவதில்லை. பாழடைந்து குழிகள் நிறைந்த வீதிகளில் சைக்கிளின் சில்லுகள் விழுந்து எழும்புவதால் பொருட்கள் பழுதடையவும் செய்கின்றன. அதனால் சந்தையில் பொருட்களை மிகவும் குறைந்த விலைக்கே விற்கவேண்டியுள்ளது. அதன்காரணமாக பெரும் நஸ்டத்தையும் எதிர்கொள்கின்றனர். சில சமயங்களில் பொருட்களை விற்பனை செய்ய இயலாது வீடு திரும்பும் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. பொருள் உற்பத்திக்காக செலவு செய்த பணத்தை ஈட்டுவதே பெரும்பாடாக உள்ளது.

### வாகனங்களின் தேய்மானம் அதிகரிக்கின்றமை.

இவ் வீதியினைப் பயன்படுத்தும் போது வாகனங்களின் தேய்மானம் அதிகரிக்கின்றது. பள்ளம் திட்டியானது வாகனங்களின் ரயர்களை விரைவாக தேய்வடையச்செய்வதுடன் வாகனங்களும் விரைவில் பழுதடையும் நிலையும் காணப்படுகிறது. இதனால் அவ்வாகனங்களை அடிக்கடி திருத்துவதனால் செலவும் அதிகரிக்கிறது. பெரிய வாகனங்களை வாங்குவதில் மக்கள் தயங்குகின்றனர். பாழடைந்த வீதியே தயங்குவதற்கு காரணம். வாகனங்களை வைத்திருக்கும் ஒரு சிலர் அதிக தூரமுள்ள சீரான வீதிகளில் தமது வாகனங்களை நிறுத்திவிட்டே வீடு திரும்புகின்றனர். அதன் காரணமாக அவர்களது வாகனத்திற்கான பாதுகாப்பும் கேள்விக்குரியதாக காணப்படுகிறது.

### சமூக மேம்பாட்டு பின்னடைவு

இவ் வீதிகளின் தோற்றம் இக் கிராமங்களை பிற்படுத்தியுள்ளது. இக் கிராமங்களின் தரத்தினை குறைத்துள்ளது. வெறும் கல்லும் குழியுமாக உள்ளதனால் இம் மக்கள் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்படுகின்றனர். உட்கட்டமைப்பு வசதிகளே ஒரு கிராமத்தின் வளர்சியை காட்டும் அம்சங்கள். இக் கிராம மக்களின் மேம்பாட்டிற்கான ஊக்குவிப்பு குறைவாகவே காணப்படுகிறது.

அத்துடன் இங்கு இயங்கும் தொழில் ஸ்தாபனங்களின் செயல்பாடுகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத் தொழில்ஸ்தாபனங்கள் நவீனப்படுத்தப்படும் பட்சத்தில் அங்கு வேலையற்று இருக்கும் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள வாய்பாக இருக்கும். வறுமையான சூழலில் வாழும் மக்களுக்கு இத் தொழில்ஸ்தாபனங்களின் இயங்குநிலை வரப்பிரசாதமாகக்கூட அமையலாம். இதனைவிட இங்கு இயங்கும் தனியார் சிறுகைத்தொழில் முயற்சிகள் பின்னடைவாகவே இருப்பதுடன் கிராமம் என்ற காரணத்தால் கைவிடப்படும் நிலையும் உருவாகும். அவர்கள் மீண்டும் கூலிகளாக்கப்படும் நிலமை உருவாகின்றது.

இங்கு அரச, அரசசார்பற்ற துறைகளில் வேலை செய்யும் பெண்களாக இருப்பினும், ஆண்களாக இருப்பினும் அவர்களது திருமணத்திற்கான தயாரிப்புகளில் இறங்கும்போது கிராமத்தின் நிலமைகளை காரணம் காட்டி அவர்களது திருமணங்கள் தடைப்பெறும் நிகழ்வுகள் இடம்பெற்றும் இருக்கின்றன. கல்வியினால் ஏற்றத்தாழ்வுகளை அகற்றமுடியும் என்பது கண்கூடு. இருப்பினும் கல்வி கற்றவர்கள் வசதி வாய்ப்புக்காக நகரங்களை தேடிச்செல்வதனால் கிராமத்தின் மேம்பாடு மேலும் கேள்விக்குள்ளாகிறது இன்று இக் கிராமங்களின் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையாக இருப்பது வீதி அபிவிருத்தியாகும். அதனூடாகவே தொழிற் ஸ்தாபனங்கள் உருவாவதற்கான வாய்ப்புகள் அமையும். கிராமங்களில் தொழில் மையங்கள் உருவாகும்போது குறிப்பாக கிராமப் பெண்களுக்கான வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும்.



பெண்களின் சுயபாதுகாப்பிற்கும் குடும்ப பொருளாதார மேம்பாட்டிற்கும் உத்தரவாதமாகவும் அமையும். வீதிகள் சீரமைக்கப்படுவதன் ஊடாக பாடசாலை பிள்ளைகள் மழைகாலத்தில் பாடசாலை செல்வதை தவிர்க்கும் நிலமைகளிருந்து மீளவும் வாய்ப்பாக இருக்கும். அத்துடன் விவசாயத்திற்கான சந்தைவாய்ப்பைப் பலப்படுத்துவதுடன் வாகனங்கள் அதிகளவு பழுதடையும் நிலமையும் தவிர்க்கப்படும். அதன் காரணமாக செலவு குறைந்து சேமிப்பு அதிகரிக்கும். இவைகளுடாக கிராம வாழ் சமூகங்களின் வாழ்க்கை முறையில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தலாம். குறிப்பாக தலித் கிராமங்களில் இவ்வாறான மாற்றங்கள் நிகழும்போதே ஒடுக்குமுறைச் சாதிகளுக்கு சேவகம் செய்துவரும் நிலையிலிருந்தும் மீள முடியும்

வடமாகாணத்தில் பல கிராமங்கள் வீதி அபிவிருத்திக்காகவும், பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தும் தேவைகளுக்காகவும் காத்திருக்கின்றன. ஆனால் அபிவிருத்திகளும், வாய்ப்புகளும் சில மேலாதிக்க சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுமுகமாகவே சம்பவங்கள் நடைபெற்று வருகிறது. தலித்திய கிராமங்களுக்கான அபிவிருத்திகள் என்பது கேள்விக்குரியதாகவே நெடுங்காலமாக இருந்துவருகின்றது. உரிய நடவடிக்கைகள் உரிய இடங்களை சென்றடைய, உரிய பொறுப்பதிகாரிகள் கவனம் எடுக்கும் போதே பாரபட்சமற்ற சமூக மேம்பாடு சாத்தியமாகும். ☐

**-தசோ-**

# சாதிய ஒடுக்குமுறையை, தீண்டாமை பாகுபாட்டை கேள்விக்குள்ளாக்கும் சக்தியா... தமிழ் தேசியம்!

**"ஆயிரக்கணக்கான சாதிகளாகப் பிளவுண்டு கிடக்கும் மக்கள் எப்படி ஒரே தேசமாக ஆவார்கள்? தேசம் என்ற சொல்லின் சமூகவியல்ரீதியிலான அர்த்தத்திலும் உளவியல்ரீதியிலான அர்த்தத்திலும் நாம் இன்னும் ஒரு தேசமாக உருவெடுக்கவில்லை என்பதை எவ்வளவு சீக்கிரம் உணர்கிறோமோ அவ்வளவுக்கு நமக்கு நல்லது. அப்போதுதான் ஒரே தேசமாக நாம் உருவாவதன் அவசியத்தை உணர்வதுடன் அந்த இலக்கை அடைவதற்கான வழிமுறைகளைப் பற்றியும் தீவிரமாக நாம் சிந்திப்போம்." (அம்பேத்கர்).**


**-தேவதாசன்-**

இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தமிழ் தேசிய முழக்கம் ஆரம்பித்து அரை நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. இதில் தமிழர்கள் அடைந்த நன்மையென்ன? தீமை என்ன? என்பது பற்றி இலங்கை இந்தியா வாழ் தமிழ் மக்கள் இதுவரை ஆய்வு செய்ததாக இல்லை. ஆனாலும் தொடர்ச்சியாக விறு விறுப்பான முறையில் தமிழ் தேசிய முழக்கங்கள் பெருகி வருவதை நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. அதன் பலா பலன்களை தமிழர்கள் அனுபவித்தும் வருகின்றனர்.


தமிழ் நாட்டில் பேசப்பட்ட தமிழ் தேசியம் சாதியை அழிப்பதற்கு பதிலாக தொடர்ந்தும் சாதியை பல பிரிவுகளாக வளர்த்துவிட்டதாகவே தெரிகிறது! பிராமணர் மட்டும் மேல்சாதியினர் பிறர் அனைவருவே கீழ்சாதியினர் எனும் நிலை மாறி பெரியசாதி சின்னசாதி, மேல்சாதி கீழ்சாதி, இடைநிலைசாதி, கடைநிலைசாதி என பல பிரிவுகள் உருவாகி தலித்துக்கள் என குறிப்பிட்ட வகுப்பினரை தீண்டத்தகாதவர்கள் ஆக்கி ஊர், சேரியென மாற்றப்பட்டு தீண்டாமையையும், ஒடுக்குமுறையையும் தொடர்ந்தும் கட்டிக்காப்பாற்றப்பட்டு வரும் நிலையே தொடர்கிறது. ஆனால் தமிழ் தேசியத்தின் தலை மகன்கள் என கொண்டாடப்பட்டு வரும் பலர் இன்று இந்தியாவின் பணக்கார வரிசையில் இடம்பிடித்து விட்டனர். தமிழ் நாட்டு அரசியல் வாதிகள் பலர் தமிழ் தேசியத்தை முன்வைத்து பணமும், புகழும் பெறும் நோக்கம் தொடர்கிறது. இப்படி தமிழ் தேசிய குதிரைகளில் ஏறியவர்களில் பலர் பணமும் புகழும் அடைந்த வழியை இயக்குனர் சீமான் அவர்களும் பின்பற்ற முனைகிறார். இதுவரை சவாரி செய்தவர்களை விட பல மடங்கு முனைப்புடன் தேசியக்குதிரையில் ஏறியுள்ளார் சீமான் அவர்கள். வரலாற்றை பேசுவதாக நினைத்துக் கொண்டு முரண்பாடுகளின் உச்சத்திற்கே சென்றுவிட்டார். அவரது கொள்ளுப்பாட்டன் இராவணன், முப்பாட்டன் முருகன், தந்தை பெரியார், அண்ணன் பிரபாகரன் என அவரது உறவுப் பட்டியல் பெருகி வருகிறது. தமிழர்களின் பாரம்பரிய ஆண்வழிச் சமூக வாரிசாக இப்போது சீமான் இருக்கிறார். இராவணன் தமிழன் என்கிறார்! அப்படியானால் இராமன் ஹிந்திக்காரன்! முருகன் தமிழன்! அவரது தந்தை சிவபெருமான் ஹிந்திக்காரன்! பெரியார் சொன்னார் இராமாயணம் ஒரு கட்டுக்கதையென. பெரியாரின் பேரன் கறுப்புச்சட்டையை பச்சை சட்டையாக்கி விட்டார். கட்டுக்கதையில் வரும் பாத்திரமான இராவணனுக்கு விழா எடுக்கப்போகிறார். உண்மைக்கு புறம்பான சினிமாக்கள் எடுத்து மக்களை ஏமாற்றிய மன நிலையிலேயே தமிழ் தேசிய வேடத்திலும் பல கற்பனைகளை பறக்கவிட்டு புகழ்தேட திட்டமிட்டுள்ளார்.

இன்றைக்கு தமிழ் நாட்டில் அடிப்படைப் பிரச்சனையாக மேலோங்கியிருப்பது சாதியமே.

அடிமட்ட சாதிய பிரிவுகளில் இருந்து வந்தவர்தான் திருமாவளவன். அவர் அடித்தட்டு மக்களின் களப் பணியாளனாக இருந்தவர். தமிழ் மொழியிலும், தமிழர்களிலும் அளப்பெரிய பற்றுள்ளவர். பேச்சாற்றல் உள்ளவர். வரலாற்று அறிவு உள்ளவர். வரலாறுகள் வழி வந்த அசல் தமிழன். உண்மையைச் சொல்லப்போனால் தமிழ் நாட்டில் இருக்கும் திராவிடக்கட்சிகள், சாதியக் கட்சிகள் என படர்ந்திருக்கும் அனைத்து கட்சித் தலைவர்களுள் அதிக ஆற்றல் உள்ள தலைவர் திருமாவளவன் மட்டுமே. இத்தனை தகுதிகள் இருந்தாலும் தேர்தல் என வருகிறபோது தொகுதிப் பங்கீட்டிற்காக கருணாநிதியின் காலில் தான் விழவேண்டியிருக்கிறது. திருமாவளவன் என்னதான் விழுந்து விழுந்து ஈழத்தமிழனுக்காக பேசினாலும் தமிழ் தேசிய வீரனாக காட்டிக்கொண்டாலும் அவர் ஒரு தலித் என்பதால் ஓரம் கட்டப்படுகிறார் என்பதுதான் உண்மை.



சீமான் உண்மையிலேயே தமிழ் மக்கள்மீது பற்றுள்ளவராக இருந்தால் உண்மையான தமிழ் தேசியவாதியாக இருந்தால் தனக்கென ஒரு கட்சியை உருவாக்காமல் திருமாவளவனது விடுதலைச் சிறுத்தை கட்சியில் இணைந்து போராடியிருக்க வேண்டும். சாதிய விடுதலையே தமிழ் தேசிய விடுதலையின் வெற்றியென முழக்கமிட்டிருக்க வேண்டும். ஆனால் அவரால் அது முடியாது!இழிச்சவாய் ஈழத் தமிழர் இருக்கும் நம்பிக்கையில், அவர்களது உழைப்பை உறிஞ்சலாம் என்பதே அவரது கட்சி உருவாக்கத்தின் நோக்கம். சீமானது முருக பக்த வேடம், இராவணன் விழா இவைகளை இரசிக்கும்






கூட்டமாகத்தான் புலம் பெயர் தமிழர்களில் பெரும்பாலானவர்கள் இருக்கின்றனர் என்பது சீமானுக்கு நன்கே தெரியும். ஏனெனில் ஈழப்போராட்டத்தை உருவாக்கி பிரபாகரன் தலையில் கட்டிவிட்டு தூரத்தில் வந்து ஒழிந்திருந்து கொண்டு பிரபாகரனை உசுப்பி, உசுப்பி முள்ளிவாய்க்கால் வரை கொண்டு வந்த பெரும் பங்கும் புலம் பெயர் தமிழர்களுக்கு உண்டு. புலம் பெயர் தேசங்களில் தமிழ் தேசியம் பேசும் வேளாளக் கருத்தியல் செயற்பாடு என இதைக் கருதலாம். இந்த வேளாளச் சாதிய கருத்தியலால் தற்போது உசுப்பிவிடப்பட்டவர்தான் செந்தமிழன் சீமான். அதனை ஒட்டியே தமிழர்களுக்கு ஒரு மதம் வேண்டும் அவனே முப்பாட்டன் முருகன் அவன் பெயரால் ‘தமிழம்’ என்னும் புதிய மதத்தினை உருவாக்கி பச்சை தமிழனாக வீதி உலா வருகிறார் சீமான் அவர்கள். தமிழ் தேசியம் பேசிக்கொண்டு முருகக் கடவுளின் துணையுடன் சென்றாலும் இவர் எவ்வளவு தூரம் செல்ல முடியும் என்பதை வெளிநாட்டுத் தமிழர்களோ, தமிழ் நாட்டுத் தமிழர்களோ தீர்மானிக்க முடியாது. பாப்பாத்தி ஜெயலலிதா மட்டுமே அதன் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கிறார்.

இலங்கைத் தமிரக்ளை வழி நடத்திச் செல்கின்ற அரசியல் தலைவர்களைப்பற்றி சொல்லவே வேண்டாம். அவர்கள் எப்போது என்ன பேசுவார்கள் என்பது அவர்களுக்கும் தெரியாது மக்களுக்கும் தெரியாது. தமிழ் ஈழம் என்பார்கள், சமஸ்டி என்பார்கள், சுயாட்சி என்பார்கள், மாகாணசபை, 13வது திருத்தச் சட்டம் என எந்தக் காலத்தில் என்ன “பொருள் விலைபோகும்“ என்பதை தெரிந்து வைத்திருக்கிறார்கள். தென்

இலங்கையில் அமையும் ஆட்சியைப் பொறுத்து வியாபார உத்திகளை மாற்றிக் கொள்வார்கள்.
மாகாணசபையை ஏற்றுக் கொள்ளமாட்டோம் எனக் கூறி மாகாணசபை தேர்தலை பல தடவை புறக்கணித்தார்கள். பின்னர் கடைசியாக நடைபெற்ற மாகாணசபை தேர்தலில் போட்டியிட்டார்கள். யாழ்ப்பாணத் தமிழர்களின் விருப்பத்தை நன்கு அறிந்தவர்கள் தமிழரசுக் கட்சியினர். யாழ்ப்பாணத்தானுக்கு தலைவனாக வாறதெண்டால் படிச்சவனா இருக்கவேணும். இந்து மத பற்றாளனாக இருக்க வேணும். வெள்ளாளனாகவும் இருக்க வேணும். இந்த மூன்று தகைமைகளும் உள்ளவர்தான் இன்றைய வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன். அதற்காக அவர் மக்கள் மீது பற்றுள்ளவராக இருக்க வேண்டும் என்பதில்லை. குறைந்த பட்சம் ஒரு சனசமூக நிலையத்தை நிர்வகிக்கும் தகைமை இருக்க வேண்டுமென்பதுமில்லை. இந்த ஆன்மீகத் தலைவர் இப்போது தமிழர்களுக்காக செய்யும் முக்கிய பணி என்னவெனில் தனது வீட்டில் இருந்து நடத்திய ஆசிரமத்தை அரச பணத்தில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்து விட்டார். இனிமேல் நித்தியானந்தா காட்சிகளைப் போன்று பல காட்சிகளை யாழ்ப்பாண மக்கள் பார்த்து இரசிக்கலாம்.



யாழ்ப்பாணத்தில் கல்லெறிந்தால் விழுகின்ற இடமெல்லாம் வீடுகள் இருக்கோ இல்லையோ கோவில்கள்தான் பெருகிக் கிடக்கிறது கல் விழும் இடங்களாக. ஊருக்கு ஒரு கோவில். வீதிக்கு ஒரு கோவில், ஒழுங்கைக்கு ஒரு கோவில், முக்கியமாக சாதிக்கு ஒரு கோவில் என குவிந்து கிடக்கும் கோவில்கள் போதாது என மாகாண முதல்வர் விக்கினேஸ்வரன் ஆசிரமத்தை அமைத்து பஜனை பாடப்போகிறார். ஆத்தா படுகிற பாட்டுக்குள்ள குத்தியன் என்னத்துக்கோ அழுதானாம்.

நல்லூரில் பிறந்து சைவத்தையும், தமிழையும் வளர்த்த ஆறுமுகநாவலர் அவர்களே தமிழ் தேசியத்திற்கும் பிதாமகனாகும். ஆறுமுகநாவலர் தொடக்கி வைத்த சாதிய தமிழ் தேசியத்தையே இன்றைய தமிழ்தேசியக் கூட்டமைப்பும் தமது கோட்பாடாக வகுத்துக் கொண்டு செயல்படுகின்றது. இந்த சைவ சித்தாந்த மன நிலையோடு தமிழர் உரிமை கேட்டு போராடுவது நடைமுறைக்கு முரணானது மட்டுமன்றி அறம் சார்ந்ததும் ஆகாது. நாம் எல்லோரும் இலங்கையில்தான் வாழ்வோம் என குறைந்த பட்சமாகவேனும் தேசப்பற்று இக்குமேயானால் அவர்களது அரசியல் நகர்வு அந்த மக்கள் நலன் சார்ந்ததாகவும், நடைமுறை சாந்ததாகவும் இருக்கும். சிங்கள அரசு ஒரு வெடியை கொழுத்தி போட்டாலும் நாம் உலகத்தின் பல பகுதிகளிலும் குறிப்பாக பணம் படைத்த நாடுகளில் சென்று வாழ தகுதி உடையவர்கள் எனும் மனநிலையில் இருந்து கொண்டே தமிழ் தேசியக் கூட்டமைப்பு முடிவுகளை எடுக்கிறது. ஆனால் சர்வதேச அரசியலில் மட்டும் மிகவும் ஆணித்தரமான கொள்கையோடு செயலாற்றி வருகின்றது. "எந்த சிங்களவன்" எந்தக் கொலை பாதகம் செய்தாலும் செய்தவன் அமெரிக்க ஆதரவாளனாக இருந்தால் அவனை நாம் ஏற்றுக் கொள்வோம். இந்த கோட்பாட்டை ஏற்றுக்கொள்வோர் மட்டுமே கூட்டமைப்பில் இணைய முடியும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யுத்தத்தின் இறுதிவரை பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேனாவை ஆதரித்ததன் ஊடாகவும் அவர்களது சர்வதேச அரசியல் கொள்கையை (மேற்குலக விசுவாசத்தை) நாம் அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் தமிழ் மகா நடிகர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து நடித்து அரங்கேற்றுவதுதான் தமிழர் கூட்டமைப்பு எனும் அரசியல் நாடகம். சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றோர் அரசை எதிர்ப்பது போலவும், சம்மந்தன், சுமந்திரன் போன்றோர் அரசுடன் இணைந்தது போலவும் இரண்டு பக்க காட்சிகளாக அரங்கேற்றப்பட்டு வருகிறது. இந்த அரங்கத்துள் வேறு எவரும் நுழைந்து விடாத வகையிலும், மக்கள் வாக்குகளை பாதுகாக்கும் வகையிலுமான ஒரு திட்டமிட்ட செயலாகவே அரச எதிர்ப்பு-ஆதரவு காட்சிகளையும் அரங்கேற்றி வருகின்றனர்.

இவர்களுள் பாராளுமன்ற உறுப்பினரான ஸ்ரீதரன் அவர்களது அரசியல் என்பது பிற்போக்கான இனவாத அரசியல். ஹெல உறுமய, சிவசேன போன்ற பௌத்த, இந்துத்துவ இனவாத கட்சிகளையே மிஞ்சும் வகையில் அவரது செயல்பாடுகள் அமைந்து வருகிறது. முஸ்லிம், சிங்கள மக்கள் மீதான வெறுப்பை வெளிப்படையாகவே பேசிவருகிறார். கனடாவிலுள்ள புகலிட தமிழ் தேசிய ஆதரவாளர்கள் மத்தியில் பேசும்போது தான் முஸ்லிம் இனத்தவரை வெறுப்பதாகவும், யூத இனத்தவரை

விரும்புவதாகவும் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கிறார். நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த சிங்கள மக்கள் யுத்தம் காரணமாக தென் இலங்கை சென்றவர்கள், யுத்த முடிவிற்கு பின் மீண்டும் தமது சொந்த இடத்திற்கு குடியேற வந்தபோது ஸ்ரீதரன் நேரில் சென்று சிங்கள மக்களை விரட்டியிருக்கிறார். இது ஞானசேர முஸ்லிம் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட செயலுக்கு எந்தவகையிலும் குறைந்ததல்ல. இப்படிப்பட்டவர்களையும் கூட்டமைப்பில் வைத்துக்கொண்டு எப்படி தமிழர் உரிமை குறித்து அரசிடம் நியாயம் கேட்கமுடியும். இப்படிப்பட்டவரே முஸ்லிம் மக்களுடன் இணைந்து வாழும் தகைமை கொண்ட ஆளுமை தனக்கே இருப்பதாக அறிக்கைகளையும் வெளியிட்டு வருகிறார்.

காலனிய வெளியேற்றத்திற்கு பின்பான தமிழ் அரசியல் தலைமைகளின் அரசியல் செயல்பாடுகளால் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்விதமான அரசியல் ஆதாயங்களும் கிடைத்திடவில்லை. மாறாக ஈடு செய்ய முடியாதவகையில் அழிவுகளையும் நாசத்தையுமே ஏற்படுத்தியுள்ளனர். தொடர்ந்தும் மக்கள் அழிவுகளுக்கான முன்னெடுப்புகளையே மேற்கொண்டும் வருகிறார்கள்.

இவர்களது சாகச அரசியலில் சிக்குண்டு சிதைந்து போகின்ற மக்கள் அடித்தட்டு மக்களே. சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான தலைமைகளை இவர்களது இனவாத தமிழ் தேசியம் அழித்தொழித்ததுடன் அந்த மக்கள் சிறுக, சிறுக சேமித்த அனைத்து வளங்களும் அழித்தொழிக்கப்பட்டுள்ளது. இந்த தமிழ்தேசிய வாதிகளிடம் சாதிய ஒடுக்குமுறைக்கும், தீண்டாமை பாகுபாட்டிற்கும் எதிராக முன்வைக்கக்கூடிய எந்த வேலைத்திட்டமும் இருந்ததில்லை. ஆறுமுகநாவலர் விதைத்த நச்சு விதையே வேரூண்றி சடைத்த ஒரு மரமாக தமிழ்தேசியமும், அதனது கிளையாக தமிழர் கூட்டமைப்பும் வளர்ந்து வருகிறது. அந்த மரம் வீசுகின்ற சுவாசமே தமிழ் பேசும் மக்களையும் அழித்துக்கொண்டிருக்கிறது. □

ஸ்ரீதரன்



**இராஜேஸ்கண்ணனின்**
**“கிராமியம்-கல்வி-மேம்பாடு”**
**“இலக்கியத்தில் சமூகம்”**





**தெணியானின்**
**“பார்க்கப்படாத பக்கங்கள்”**



**கிடைக்கப்பெற்ற நூல்கள்**



# சாதிய மனநிலையில் அலட்சியப்படுத்தப்பட்ட “தலித் மக்களின் உரிமைப்போராட்டம்”

திருகோணமலை நகரத்து சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்கான போராட்டத்தை கடந்த மே2-3 (2015) ஆம் திகதிகளில் நடத்தினார்கள்.

- பல வருடங்களாக இத்தொழிலாளர்களின் சம்பளம் உயர்தப்படாமல் இருப்பது.
- நூற்றுக்கணக்கான பெண்களும் ஆண்களும் தொடர்ந்தும் பல வருடங்களாக நிரந்தர பணியாளர்களாக இல்லாது நாட்கூலிகளாகவே இருப்பது.
- பிள்ளைப் பேறுகாலத்து உதவிகள் மறுக்கப்பட்டு வருவது.
- மருத்துவ விடுமுறைகாலத்திற்கான உதவிகள் மறுக்கப்பட்டு வருவது.
- இத்தொழிலாளர்களுக்கான ஓய்வூதிய உத்தரவாதம் மறுக்கப்பட்டு வருவது.

மேற்படி நீண்டகாலமாக மறுக்கப்பட்டு வரும் உரிமைகளை கோரும் முகமாக திருகோணமலை நகரசுத்திகரிப்புத் தொழிலாளர்களால் உரிமைப்போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்தொழிலாளர்களின் போராட்டம் தமிழ் தேசிய ஊடகங்களால் அலட்சியப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அடிப்படை காரணமாக சாதிய மனநிலையே மேலோங்கியுள்ளது.


திருகோணமலை நகரசபை நிர்வாகத்தின் அதிகார ஆதிக்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பினரிடமே உள்ளது. இவர்கள் இச்சமூகத்தின் உரிமைப் போராட்டத்தையும் அவர்களது சமூக மேம்பாட்டிலும் எவ்வித அக்கறையும் காட்டவில்லை. சிங்கள இனவாதத்திற்கே முன்னுரிமை கொடுத்துவரும் யாழ் மேலாதிக்க ஊடகங்கள் எதற்கும் தலித் சமூகத்தின் இவ்வாறான உரிமைப்போராட்டம் ஒரு மூலைச் செய்திக்காகவேனும் பயன்படவில்லை.

சிங்கள பத்திரிகையாளர்களே இச்சம்பவத்தை கவனத்தில் எடுத்து திருகோணமலை நகரசபை நிர்வாகத்தை தொடர்பு கொண்டுள்ளனர். அதன்போது திருகோணமலை துணை நகரபிதாவான சேனாதிராசா ஸ்ரீகாந்தராஜாவை தொடர்புகொண்டு நகரசுத்தித் தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து கேள்விகளை முன்வைத்துள்ளனர்.

இத்தொழிலாளர்களின் பிள்ளைகள் பல்வேறு தகுதிகள் இருந்தும் அவர்கள் பிற உத்தியோகங்கள் செய்வதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டுவருவதாக கூறுகிறார்கள். கல்வித் தகைமைகள் இல்லாத உயர்சாதியினருக்கு பல்வேறு சலுகைகளும் வேலைவாய்ப்புகளும் வழங்கப்பட்டு வருவதாகவும் கருத்து நிலவுகிறது. இவைகள் சாதி அடிப்படையிலான பாகுபாடுகளாகவும் சட்டத்திற்கு முரணாகவும் உங்களுக்கு தெரியவில்லையா? என்ற கேள்வியை துணை மேயரான சேனாதிராசா ஸ்ரீகாந்தராஜாவிடம் சிங்கள பத்திரிகையாளர்கள் முன்வைத்தனர்.

“வழமையானவர்களுக்கே” நாம் அத்தொழிலை வழங்கிவருகிறோம் என்பதான சாதியமேலாதிக்க வன்முறையை பதிலாக வழங்கியதோடு மேற்கொண்டு இதற்கு பதிலளிக்க முடியாதெனவும் துணை மேயர் கூறியுள்ளார்.

இவ்வாறான சமூகப் பொறுப்பற்ற தமிழ் தேசிய சாதிய மனிநிலையுடைய ஊடகங்களையும், சாதிய மேலாதிக்க போக்குடைய தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிர்வாகத்தையும் இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணி வன்மையாக கண்டிக்கிறது. ☐



# இ.இராஜேஸ்கண்ணன் அவர்களின் "இலக்கியத்தில் சமூகம்"-பார்வைகளும் பதிவுகளும்," "கிராமியம்-கல்வி-மேம்பாடு"சமூகவியல் பார்வைகள்- எனும் இரண்டு நூல்களுக்கான அறிமுகம்.

-அசுரா-

வடமாகாண தென்னை பனை அபிவிருத்திச் சபையின் மாநாடு 2010இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது அம் மாநாட்டில் சமர்ப்பித்த கட்டுரை ஊடாகவே புகலிடத்தில் எமக்கு இராஜேஸ்கண்ணன் அறிமுகமாகினார். அதை தொடர்ந்து அவரது சிறுகதை தொகுப்பான "தொலையும் பொக்கிசம்" வழியாக அவரது படைப்புகளை அனுபவிக்கும் வாய்ப்புகள் கிடைத்து வருகிறது. இலக்கியப் படைப்பாற்றலுக்கும் அப்பால் இராஜேஸ்கண்ணன் சிறந்த பேச்சாளர். தோழர் யோகரட்ணத்தின் "தீண்டாமைக் கொடுமைகளும் தீ மூண்ட நாட்களும்" நூல் வெளியீடு 2011இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது அந்நூல் குறித்த காத்திரமான ஒரு விமர்சன உரையை நிகழ்த்தியவர்.

2014இல் இலங்கை சென்றபோது கிடைத்த நூல்களே மேற்படி இராஜேஸ்கண்ணன் அவர்களது இரண்டு நூல்களாகும்.

"இலக்கியத்தில் சமூகம்"-பார்வைகளும் பதிவுகளும் எனும் நூல் ஏப்ரல் 2014இல் ஜீவநதி வெளியீடாக வந்துள்ளது.

"கிராமியம்-கல்வி-மேம்பாடு"-சமூகவியல் பார்வைகள்- எனும் நூல் சாத்வீகசுருதி வெளியீடாக டிசம்பர் 2013இல் வெளிவந்துள்ளது.

கலை இலக்கியம் குறித்த சமூகவியல் கோட்பாடுகளும், விமர்சன ஆய்வுகளும் வரலாற்று அறிதலூடான வளர்ச்சிப்போக்கில் அவை பல்வேறு சிந்தனைப் போக்குகளாக பெருகிக் கொண்டே செல்கிறது. சமூகம், வரலாறு போன்றவைகள் மீதான கோட்பாட்டு உருவாக்கம் என்பது அவற்றை கற்றுக்கொள்வதன் ஊடாக வந்தடையும் ஒரு எண்ணக் கருவாகும். அவை நிலைபேறானதும் அல்ல. அவை கற்றுக் கொள்பவர்களின் ஆளுமைகளுக்கு ஏற்ப மாறுபடுகிறது. தனி மனித ஆற்றலுக்கும் அப்பால் காலம், வெளி, சூழல் எனும் பௌதீக காரணிகளும் சிந்தனை மாற்றத்திற்கான புறத்தூண்டுதலாக அமைகிறது. இவ்வாறு கலை இலக்கியம் சார்ந்த சமூகவியல் கோட்பாட்டு அறிஞர்களின் பன்முக சிந்தனைகளை உள்வாங்கிய ஒரு தொகுப்பாக "இலக்கியத்தில் சமூகம்" -பார்வைகளும் பதிவுகளும்- எனும் நூலை அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

கலை இலக்கியங்கள் மீதான மார்க்சிய விமர்சனக் கோட்பாட்டின் கருத்துநிலை, கலை இலக்கியம் குறித்த பின் நவீனத்துவ அணுகுமுறை போன்ற பல்வேறு சிந்தனை மரபுகளின் அறிமுகத்தோடு இராஜேஸ்கண்ணன் அவர்களின் இக்கட்டுரை தொகுப்பு நூல் வெளி வந்துள்ளது. அறிமுகக்கட்டுரை தவிர்ந்த இந்நூலின் உள்ளடக்கங்களாக ஒன்பது கட்டுரைகள் உள்ளது. ஈழத்தின் நாட்டார் இயல் ஆய்வின் முன்னோடிகளில் ஒருவராக கருதப்படும் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை அவர்களின் "கதலியாற்றுப்படை" எனும் கவிதை இலக்கியம் ஆய்விற்குட்படுத்தப் பட்டுள்ளது. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் ஸ்தாபகரான பாவலர் துரையப்பா அவர்களது சமூக சீர்திருத்தம் மீதான அக்கறை, அவர் கல்விக்காக மேற்கொண்ட பணிகள், மேலும் அவரது இலக்கிய ஆளுமைகளை வெளிப்படுத்துமுகமாக அவரது பல பாடல்களையும் அவைகளின் அர்த்தச் செறிவினை விபரிக்கும் கட்டுரை, சமூகவியல் நோக்கில் திருக்குறள், ஔவை எனும் இலங்கை பெண் கவிஞரின் ஆளுமை, "கைகூ" கவிதைகளோடு ஒப்புநோக்கும் ஈழத்து கவிதைகள், ஔவையாரின் ஆத்திசூடி பாங்கிலே எழுதப்பட்ட பாரதி, ஈழத்து கவிஞர் முருகையன் போன்றோரின் முயற்சிகள், மறைந்த ஜெயகாந்தனின் சிறுகதையான "யுகசந்தி" குறித்த மதிப்பீடு, புதுமைப்பித்தனின் "சாபவிமோசனம்" எனும் சிறுகதையின் உசாவல், கவிதை மொழிப் பயன்பாடு குறித்த கட்டுரை

என பத்து ஆக்கங்களை கொண்ட தொகுப்பாக வெளிவந்திருக்கிறது. இத்தொகுப்பிற்கான பதிப்புரையை பரணீதரனும், வாழ்த்துரையை பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்களும், அணிந்துரையை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்களும் வழங்கியுள்ளனர்.

**2,** "கிராமியம்-கல்வி-மேம்பாடு"-சமூகவியல் பார்வைகள்- எனும் இந்த புத்தகமும் இதன் உள்ளடக்கமும் எனது பிரத்தியேகமான கவனத்திற்கு உள்ளானது. அதிகமாகவே அது அரசியலாக இருக்கட்டும், சமூகவியலும் அதன் உளவியல் பாத்திரம் குறித்த ஆய்வுகளாக இருக்கட்டும் எவையுமே எமது பண்பாட்டு-மத-கலாசார-சாதிய விழுமியங்களுக்கு நெருக்கமுடைய ஆய்வுகளாக என்னால் அவதானிக்க முடிந்ததில்லை. "கிராமியம்-கல்வி-மேம்பாடு"-சமூகவியல் பார்வைகள்- எனும் இராஜேஸ்கண்ணன் அவர்களின் இந்த நூல் நான் கண்டடைந்த வகைகளில் ஒரு திருப்பு முனையாகவே கருதுகிறேன்.




பல்வேறு மேற்குலக அறிஞர்களின் குறிப்பாக சமுதாய ஒப்பந்தத்தை அறிமுகப்படுத்திய Jean jaques rousseau அவர்களின் கருத்து நிலைகளையும் உள்வாங்கி "யாழ்ப்பாணத்துக் கிராமிய கூட்டு வாழ்வும் மாறுதல்களும்" எனும் கட்டுரையை இராஜேஸ்கண்ணன் இத்தொகுப்பில் இணைத்திருக்கிறார். இந்த கட்டுரைத் தொகுப்பானது தொடர்ந்து உரையாடுவதற்கும், விவாதிப்பதற்குமான ஒரு தளம். இந்த நூல் குறித்த ஒரு விமர்சனத்தை மேற்கொள்வதாயின் அதுவே ஒரு தொகுப்பாக வெளிவரக்கூடிய செறிவைக் கொண்டது. என்பது எனது அனுபவம். இருப்பினும் இத்தொகுப்பில் உள்ளடக்கப்பட்ட அனைத்துக் கட்டுரைகளின் பொதுவான அறிமுகத்தை, வாசிப்பின் ஆர்வத்தை தூண்டும் நோக்கத்தில் சுருக்கமாக முன்வைக்க விரும்புகின்றேன்.

மனிதன் பிறக்கும்போது சுதந்திரமாக பிறந்து எவ்வாறு அவன் சமூகத்தாலும் அரசியல் சட்டவிதிகளாலும் கட்டுப்படுத்தப்படுகிறான். பிறக்கும்போது இருந்த அவனது சுதந்திரம் எவ்வாறு பறிபோனதென்பதை Jean jaques rousseau அவர்களே தனது Le contra social எனும் நூலில் அம்பலப்படுத்தினார். 1762இல் வெளியான அவரது Emile, Le contra social எனும் இரண்டு நூல்கள் அப்போதைய பிரான்ஸ் அதிகார வர்க்கத்தினால் தடைசெய்யப்பட்டதோடு அவரது இரு நூல்களும் எரிக்கப்பட்டது. மனித சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் கோரிக்கைகளுக்கு முகாந்திரமாக அமைந்த 1789 பிரஞ்சுப் புரட்சியின் பிற்பாடே Jean jaques rousseau அவர்களின் சமுதாய ஒப்பந்தத்தின் மகத்துவம் உணரப்பட்டது. 1789ற்கும் 1799ற்கும் இடையிலான பத்து வருடத்தில் 32 தடவைகள் சமுதாய ஒப்பந்தம் பதிப்பிக்கப்பட்டுள்ளது. "கிராமியம்-கல்வி-மேம்பாடு"-சமூகவியல் பார்வைகள்- எனும் தொகுப்பில் உள்ள கட்டுரைகள் வெறுமனே மேற்குலக சமூகவியல் சிந்தனையாளர்களின் கருத்துக்களை பிரதிபலிக்கும் கட்டுரைகள் அல்ல. சமூகவியல் துறை விரிவுரையாளரான இராஜேஸ்கண்ணன் அவர்கள் எமது சமூக நிறுவனங்களோடும் இணைத்துப் பார்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.




"உட்படுத்தல் கல்வி: மனப்பாங்கு மாற்றமும் சவால்களும்" எனும் கட்டுரை மாற்று வலுவுள்ளவர்களின் சமூக முக்கியத்துவம் குறித்து பேசுகிறது. கல்வி என்பது தொழில் வாய்ப்பை பெறுவதற்கான அறிவை மட்டுமே பிரத்தியேகமாக கொண்டுள்ளது. அதுவே முறைசார் கல்வி எனப்படும். முறைசாரா கல்வியின் தேவையும் அவசியமும் பற்றிய தகவல்களை "கல்வியும் கிராமிய மேம்பாடும்: ஒரு கல்வியின் சமூகவியல் தரிசனம்" எனும் கட்டுரை ஊடாக வலியுறுத்துகிறார். அதேபோன்று ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான உறவுகள், சனசமூக நிலையங்களின் சமூக வகிபாகம், முரண்பாடு குறித்த ஒரு தர்க்கவியல் ஆய்வு, உலகமயமாக்கலின் சாதக பாதக கூறுகள், யாழ்ப்பாணத்து கிராமிய கூட்டு வாழ்வு பற்றிய தேடல் என பத்து கட்டுரைகள் அடங்கிய தொகுப்பாக "கிராமியம்-கல்வி-மேம்பாடு சமூகவில் பார்வைகள்" எனும் தொகுப்பு பல்வேறு தேடல்களுடாக சமூக அக்கறையுடன் எழுதப்பட்டிருப்பது வரவேற்கவும் பாராட்டப்பட வேண்டியதுமாகும்.

பேராசிரியர் என்.சன்முகலிங்கன் அவர்களின் அணிந்துரையுடனும் வெளிவந்திருக்கிறது. நான் முன்பே குறிப்பிட்டதுபோல் இந்நூல் தொடர்ந்து விவாதிக்கவும், கலந்துரையாடுவதற்குமான ஒரு தளத்தை உருவாக்கியிருக்கிறது. இலக்கிய படைப்பாளிகள் வாசகர்கள் அப்பணியை மேற்கொள்ளவேண்டும்.

## தொடர்புநிலைக் கருத்து- நூல் குறித்த விமர்சனம் அல்ல.

கிராமிய மேம்பாடு, கல்வி வளர்ச்சியும் அதன் சமூக பயன்பாடும், ஆசிரியர்களின் சமூக வகிபாகம் போன்ற பல்வேறு மேம்பாடு குறித்த உசாவல் மனித சமூகம் எனும் பொதுவான (global) பார்வைக்கு பொருத்தமானதும், அவசியமானதும்கூட. இருப்பினும் சமூகவியல் உட்பட பல்வேறு விடயங்களையும் அதன் பன்முக பரிமாணங்களுக்கு இடையிலான செயலாற்றுகையையும் (interaction) கவனத்தில்

கொள்ளப்பட வேண்டும். பொதுவாக சிந்தித்து பகுதியாக செயல்படுவதும் (think global and act local ) அதேபோன்று பகுதியாக சிந்தித்து பொதுவாக செயல்படும் (think local and act global) முறைமை எனும் சிந்தனை மாற்றம் தேவைப்படுகிறது. சமூகம் குறித்த பொதுவான சிந்தனையோடு இணைந்த சாதியம் குறித்த பகுதியான சிந்தனை எமக்கு அவசியம்.

சாதி என்பது பிறப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு வருகிறது. வர்ணம் என்பது தகுதி-அந்தஸ்து எனும் அடிப்படையில் நிலைபேறாக உள்ளது. இரண்டுக்கும் இடையில் மாறுபட்ட கருத்து நிலவுவதாக தோன்றினாலும், ஒன்று மற்றொன்றை சார்ந்ததாகவும், அதனை வலுப்படுத்தும் சக்தியாகவும் நீடித்துவருகிறது. எமது சமூகத்தில் பிறப்பின் அடிப்படையில் 2050இல் பிறக்க இருக்கும் ஒரு குழந்தைக்கு அந்தக் குழந்தையோடு சாதி அடையாளமும் இணைந்தே பிறக்கும். ஆனால் அக்குழந்தைக்கு வர்ணம் குறித்த எந்த அறிவும் இருக்காது அதை தெரிந்து கொள்வதற்கான அவகாசமோ சூழலோ இருக்கப்போவதில்லை. இருப்பினும் வர்ணத்தினால் தீர்மானிக்கப்பட்டு வரும் தகுதியும், அந்தஸ்தும் 2050இல் பிறக்கப்போகும் அக்குழந்தைக்கும் வந்து சேரும். எமது மத்தியில் நிலவும் சாதியம் ஒரு முரண்பாட்டு அம்சம் அல்ல. பொருளாதார ஏற்றத் தாழ்வின் விளைவும் அல்ல. அது சமூக பிரிவினையை அடிப்படையாக கொண்டது. எனவே நாம் ஒரு சமூகம் எனும் கருத்து நிலைக்கு தகுதி உடையவர்கள் தானா? ஒவ்வொரு சாதியும் தம்மை ஒவ்வொரு சமூகமாக கருதும் மனநிலையோடு வாழ்ந்து வருகின்றனர் என்பதையும் மறுக்கமுடியுமா?

இவ்வாறான உணர்வும், தகுதியும், அந்தஸ்தும் குடும்பங்கள் ஊடாகவும், மத-பண்பாட்டு-கலாசாரங்கள் ஊடாகவும் ஈடுபாட்டுடன்; 2050இல் பிறக்கும் ஒருவரையும் வந்தடையும். ஒவ்வொரு சாதிய சமூகமும் அக்குழந்தையை அவ்வாறே தாலாட்டி வளர்க்கும். அப்புதிய தலைமுறைக்கு வர்ணக் கோட்பாடு குறித்த எவ்வித அறிவும் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. “சமூக மனமே ஒரு கூட்டு மனம் (colective mind) அதுவே உயர்ந்தது” என Emile Durkeim,Mc Dougall போன்ற சமூகவியலாளர்கள் கூறுவதில் உள்ள உன்னதமான நியாயத்தை எவரும் மறுப்பதற்கில்லை. அவர்கள் எதிர்கொள்வது கூட்டு மனமுடைய ஒரு சமூகத்தை. அது ஒரு பொதுவான சிந்தனை. நாமோ சமூகம் குறித்து பகுதி பகுதியாக சிந்திக்க வேண்டியுள்ளதே? எனவே இவ்வாறான இந்த சாதிய சமூக உளவியலை, இந்த சாதிய சமூக வியாதியை போக்கும் வைத்தியர்கள் யார்? □

# பெண் இனத்தை கருக்குவதோ?

காலை உணவு வயிற்றில் செமிக்குமுன்
தாயின் வழியனுப்பல் சத்தம் காதில் ஒலிக்கையில்
சைக்கிளில் எதை நினைத்து உழைக்கினாளோ
பள்ளி அடையவென நினைத்தவளின் பயணத்தை
காடையர்கள் எவ்வழி மறித்தாரோ?

தங்கையே உன் மனம் பட்டபாடு யார் அறிவார்?
வித்தியா என்ற நாமம் கூட கயவர் அறிவாரோ?
எங்கிருந்து அவதரித்தனரோ அரக்கர்கள்?
மதிமயங்கும் வேளையில்லை அது
போதை வெறியருக்கு நித்தம் மதிமயக்கமோ?
காலை வேளை எதற்கு இந்த காமவெறி?

அவள் பருவமங்கைதான் ஆனால் சிறுமி
ஆயிரம் ஆசைகளை மனதில் அடக்கிவைத்த மொட்டு
பூவென மலர்ந்து புதுப்பொலிவு பெறும் என்று
பெற்றவர் கற்பனை ஆயிரம் வளர்த்திட
கயவர் கையில் சிக்கி மொட்டு கருகியதே

யாருமற்ற அலரிமரக்காடு
அலறும் ஒலி கூட வெளித்தெரியவிடாது
வாயில் துணியடைய மனம் எப்படி வந்தது?
அரக்கர் தலையில் பலமாய் தாக்கினரே மயக்கமுற்றாளோ?
காடுவழி இழுத்து செல்ல அவள் என்ன பொம்மையா?

அவளின் அழுகையும் பயப்பார்வையும்
கயவரை உலுக்கவில்லையா?
மிருகம் கூட இரங்கி விடும்
இக் கயவர்களுக்கு ஏன் வரவில்லை?
குற்றுயிராய் கிடந்தவளை
கொடுமைகள் பல செய்து
பத்துபேர் பலாத்காரம் செய்து பலி எடுக்க
அவள் என்ன ஜடமா?
மடையரே நீவீர் மனிதரோ?

கயவர்களே உங்களைப் பெற்றவளும் பெண்தானே!
கூடப்பிறப்பவளும் பெண்தானே! இரக்கமற்ற
இழிசெயலுக்கு- மனம்
எங்ஙனம் இசைந்தது?

போதை உன்னை மதிமயக்குமென்றால்
ஏன் அதை நாடுகிறாய்?
சகோதரியாய் நேசிக்கவேண்டிய
பெண்களை கசக்கி
சிதைக்கும் அநாகரிக
குணத்தை ஏன்
பெற்றாய்?

எங்கே நீதி!!

சோனியா

# தலித் சமூகம் எதிர்கொள்ளும் சவால்கள்

ஒஸ்லோவில் 2015 ஏப்ரல் 4- 5ம் திகதிகளில் நடைபெற்ற 44வது இலக்கியச் சந்திப்பில் தலித் விடுதலையை முன்னெடுப்பதில் உள்ள தற்போதைய சவால்கள் எனும் தலைப்பில் ஆற்றிய உரையின் கட்டுரை வடிவம்.

தலித் விடுதலையை முன்னெடுப்பது எனும் விடயத்தில் இரண்டு சம்பவத்தை நான் பிரதான அம்சமாக கருதுகின்றேன். முதலாவது சாதியத்தை அழிந்து விடாமல் காப்பாற்றும் சமூக மனநிலை குறித்தது. இரண்டாவது தலித்துக்கள் அரசியல் அதிகாரங்களில் பங்கேற்பதை தடுப்பது சம்பந்தமானது.



மேற்படி இரண்டு விடயங்களையும் "ஆதிக்க சாதிய மனநிலையும்", மேட்டுக்குடி சாதிய மனநிலையுமே பேணி வருகிறது என்பதை சாதிய ரீதியாக பல்வேறுஒடுக்கப்பட்டு வருபவர்கள் முதலில் சிந்திக்க வேண்டியுள்ளது. மிகவும் திட்டமிட்ட வகையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இவ்வாறான நடவடிக்கைகளால் தொடர்ந்தும் சாதிய ரீதியாக ஒடுக்கப்பட்டு வரும் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை· எதிர்கொள்பவர்களாக உள்ளனர்.

### சாதியம் அழிந்து விடாது காப்பாற்றும் சமூக மனநிலையில் கலாசார கூறுகள் பிரதான பங்கு வகிக்கின்றது.

### கலாசாரத்தின் பெயரால் காப்பாற்றப்பட்டு வரும் சாதியம்.

இன்று தமிழ் தேசிய வாதிகளாலும், தமிழ் மொழி பற்றாளர்களாலும் பிரயோகிக்கப்பட்டு வரும் உத்திகளில் தமிழ் கலாசாரம் காப்பாற்றப்பட வேண்டும் என்பது பிரதான இலட்சியமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இலங்கையிலும், உலகின் பல்வேறு நாடுகளுக்கு இடம் பெயர்ந்தபோதிலும் கலாசாரம் காப்பாற்றப்பட வேண்டும் என்கிற இலட்சியத்தின் உள்ளடக்கத்தில் சாதியமே காப்பாற்றப்பட்டு வருகிறது.

### இந்து மதத்தை வளர்ப்பது.

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதை குழந்தைப் பருவத்திலிருந்து உணவுடன் கலந்து ஊட்டப்பட்டே நாம் வளர்க்கப்பட்டவர்கள். முப்பது வருட யுத்தம் முடிந்தபிற்பாடு மக்கள் வாழ்வதற்கு ஓலைக் குடிசைகள் ஏனும் இல்லாத சூழலிலும், மக்களே இல்லாத ஊர்களிலும் ஆலயங்கள் மட்டும் செழிப்பாக பலவர்ணங்களில் ஓங்கி உயர்ந்து நிற்கிறது. ஆகம முறையில் கட்டிக்காத்துவரும் இந்து ஆலயங்களும் மதமும் சாதியை காப்பாற்றுவதில் பெரும் பங்கு வகிக்கிறது.

### சாதிக் கலப்புக் காதல் திருமணங்களுக்கு எதிரான போக்கு.

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் "தமிழ் வளர்க்கப்படுகிறது"! "தமிழ் தேசியம் வளர்க்கப்படுகிறது"! ஆனால் காதல் கொல்லப்படுகிறது! இங்கு முளைவிடும் காதல் வேரோடு பிடுங்கப்படுகிறது. சாதியை காப்பாற்ற முனையும் பெற்றோரை எதிர்த்த காதல் திருமணங்கள் நீண்ட காலம் தொடர்வதில்லை. பெற்றோர்களின், உறவுகளின் ஆதரவு இல்லாத நிலையிலும், பெற்றோர்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் இடையூறுகளாலும் மனம் உடைந்த அவ்வாறான காதல் கலப்புத் திருமணங்கள் பாதி வழிகூட தாண்டுவதில்லை. வன்னியில் சமூக நெருக்கமின்றி யுத்த சூழலில் சாதிக் கலப்புத் திருமணம் செய்து கொண்ட போராளிகளை 2009ற்கு பிற்பாடு சமூகம் உள்வாங்க மறுக்கும் செய்திகளையும் நாம் அறிந்து கொண்டுதான் இருக்கிறோம்.

-அ.தேவதாசன்-

### இரத்த உறவுத் திருமணங்கள்.

பல குடும்பங்கள் இரத்த உறவுக்குள் திருமணம் செய்வதில் முனைப்பாக இருப்பதற்கு சொந்த- பந்தம்- சொத்து போன்ற நெருக்கமான பாசப்பிணைப்பு என்பதாக கூறப்பட்டு வருகிறது. இருப்பினும் சாதிய நெருக்கமே அடிப்படையில் அவற்றை தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது.

### பெண் ஒடுக்குமுறையை பேணும் வகையில்


பெண்கள் மீதான ஒடுக்குமுறை எனும்போது அவை பாரம்பரியமாகவே ஒரு ஆணாதிக்க மனநிலையாகவே

பொதுவாக கருதப்படுகிறது. இங்கு ஆணாதிக்க ஒடுக்குமுறையை பெண்கள் இரண்டுவகையில் எதிர்கொள்கின்றனர். அதாவது தலித் பெண்கள் உயர்சாதி எனப்படுபவரை காதல் திருமணம் செய்யும் தருணத்தில் பொதுவான ஆணாதிக்க மனநிலையிலும், சாதிய மனநிலையிலும் ஆணாதிக்க ஒடுக்குமுறைகளை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறான கலாசார கூறுகளில் சாதியம் பேணப்பட்டு வருவதற்கான அம்சங்கள் நிறையவே உள்ளது. இவற்றை பாதுகாப்பதும், தொடரும் சந்ததியினரிடம் இவற்றை ஒப்படைப்பதும் கூட எமது கலாசாரமாகவே நிலவுகிறது. இதில் எவ்வித மாற்றமும் நிகழ்ந்துவிடாதிருப்பதில் தமிழ் தேசியமும், தமிழ் மொழிப் பற்றும் கணிசமான பங்கினை வகித்து வருகிறது. சாதிய ஒழிப்பு குறித்து சிந்திப்பவர்களும், சாதிய ஒடுக்குமுறைக்குள்ளாகும் மக்களும் எதிர்கொள்ளும் சவாலாக இருப்பது எம்மிடையே பேணப்பட்டு வரும் சடங்கு சம்பிரதாய பண்பாட்டு அவலங்களே.

## 2, தலித்துக்கள் அரசியல் அதிகாரங்களில் பங்கேற்பதை தடுப்பது சம்பந்தமானது

இதற்கான ஆரம்ப முயற்சியாக ஆதிக்க சாதியினர் மிக திட்டமிட்ட வகையில் தலித் சமூகத்தின் அறிவை ஒடுக்கும் செயலில் இறங்கினார்கள். தலித் மக்களின் கல்வி அறிவிற்கு தடையாக இருந்த செயலே அவர்களது அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கு தகுதியற்றவர்களாக்குவதற்கான முதன்மை சதியாக அமைந்தது. இச்சதிகளுக்கு காரணமாக இவர்கள்: கதைக்கப் பேச தெரியாதவர்கள், மரியாதை தெரியாதவர்கள், தூய்மை அற்றவர்கள், நிர்வாகம் செய்யத் தெரியாதவர்கள் எனும் கருத்துகளை திட்டமிட்டு பரப்பினார்கள். இருந்தபோதும் முற்போக்கு சிந்தனையாளர்கள், மற்றும் இடது சாரிகளின் தொடர்ச்சியான பல்வேறு போராட்டங்களூடாக தலித் மக்கள் பல்வேறு சமூக தடைகளை தாண்டி வந்துள்ளனர். இருந்தபோதும் இன்றுவரை கல்வி சம்பந்தமான விடயத்தில் தலித் மக்களுக்கான தடைகள் முற்றாக நீங்கிவிடவில்லை. அவர்களுக்கான மேற்படிப்பு வசதிகள், பதவி உயர்வுகள் என்பவற்றிற்கு சாதியம் தற்போதும் தடையாகவே இருந்து வருகிறது. இதற்கான பின்புலத்தில் சாதித் திமிர் கொண்ட நிழல் மனிதர்கள் செயற்பட்டுவருகிறார்கள்.



இவ்வாறான நெருக்கடிகளை தாண்டுவதென்பது மிக சாதாரணமான விடயமோ, விரைவில் தீர்க்கூடிய சம்பவமோ அல்ல. இவை குறித்த அக்கறையுடைவர்கள் மத்தியில் பல்வேறு உரையாடல்களும் சிந்தனை மாற்றங்களும், தேடல்களும் அவசியமாகிறது. அந்தவகையில் நாம் சில கருத்தியல், கலாசார விடயங்கள் மீது தொடர்ச்சியாக கேள்வி எழுப்பவேண்டியுள்ளது. □

---

## சமரச சன்மார்க்கம்

**சகோதர! சகோதரிகளே!**

**சமரச சன்மார்க்கம் என்பது வாயால் சொல்லக்கூடியதே தவிர, காரியத்தில் நடக்க முடியாததாகும். ஏனெனில், எது எது சமர சன்மார்க்கம் என்கின்றோமோ, எது எது உண்மையான-இயற்கையான சமரச சன்மார்க்கமென்று கருதுகின்றோமோ அவற்றிற்கு நேர் விரோதமாகவே மனித வாழ்க்கை அமைக்கப்பட்டிருக்கின்றது. இது நமது நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலுமே அப்படித்தான் அமைக்கப்பட்டுப்போயிற்று. ஆனால், நமது நாட்டில் மற்ற நாடுகளை விட வெகுதூரம் அதிகமான வித்தியாசம் வைத்து அமைக்கப்பட்டு விட்டது.**

**முதலாவது கடவுள், மதம், ராஜா, ஜாதி, பணம், தொழில் போன்றவைகள் இயற்கைக்குப்பாத்திரமான சமரச சன்மார்க்கமல்லாமல், நியாயப் பூர்வமான சமரச சன்மார்க்கத்திற்கும் விரோதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், ஒருவன் சமரச சன்மார்க்கத்தைப்பற்றிப் பேசவேண்டுமானால், மேற்கண்ட கட்டுப்பாடுகளை வைத்துக்கொண்டு சமரச சன்மார்க்கம் ஏற்பட வேண்டும் என்கின்ற முறையில் யோக்கியர்களாலோ, அறிவாளிகளாலோ பேச முடியாது.**

**-தந்தை பெரியார்-**

# அரசியல் நீக்கம் செய்யப்பட்ட அருந்ததியர்களுக்கு நீதி எங்கே



**(இந்த புகைப்படம் 1952 இல் எடுக்கப்பட்டது. கொட்டாஞ்சேனை ஸ்ரீ குனானந்த மாவத்தையிலுள்ள சிமெந்து தோட்டத்தில் எடுக்கப்பட்டது. அப்போது அந்த ஒழுங்கையில் 14 அருந்ததியர் குடும்பங்கள் வாழ்ந்து வந்தார்கள் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தினால் நாடு கடத்தப்பட்டதினாலும் சாதிய தப்பி ஓடலின் காரணமாகவும் இன்று 2 குடும்பங்கள் மட்டுமே எஞ்சிருக்கிறார்கள்.)**

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட மலையக இந்திய வம்சாவளி மக்கள், காலங்காலமாக அடைத்து வைக்கப்பட்டிருந்த லயன் வாழ்க்கை முற்றுப்பெறத் தொடங்கியிருக்கிறது. பல ஆண்டுகாலப் போராட்டத்தின் பலன் இது. “பசுமை பூமித்திட்டம்” நீதியான முறையில் முழுமை பெற அடுத்த கட்டப் போராட்டத்தை முன்னெடுக்கத் தள்ளப்பட்டுள்ளனர் மலையக மக்கள். காம்பரா வாழ்கையிலிருந்து விடுதலை பெற்று தம்மால் செழிப்பாக்கப்பட்ட நிலத்தில் 200 வருடங்களின் பின்னர் சொந்தமாக ஒரு காணித்துண்டை பெற்றுகொள்வதற்கான பயணம் பல முள் நிறைந்த பயணங்களைத் தாண்டி வந்தடைந்துள்ளது.

இந்த பிரச்சினையின் இன்னொரு வடிவத்தை அரசாங்கமும் அரசியல் சக்திகளும் அடையாளம் காண வேண்டியிருக்கிறது. அதை முன் வைப்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

வீடு, காணி பிரச்சினைத் தீர்வில் நகரசுத்தித் தொழிலாளர்களான அருந்ததிய மக்களும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த கோரிக்கையை முழுமையாகப் புரிந்துகொள்ள முயல வேண்டும்.

இவர்கள் குறித்து அரசியல் தளத்தில் போதிய அக்கறை நிலவுவதில்லை. இவர்கள் பற்றிய கரிசனை இன்மைக்கான காரணங்கள் மிகவும் சூட்சுமம் மிக்கது.

யார் இவர்கள்

1815இல் கண்டியை கைப்பற்றியதோடு முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவந்ததன் பின்னர்தான், தமது வர்த்தகத்தையும் காலனித்துவத்தையும் உறுதியாக நிலைநிறுத்த தமக்கான ஏற்றுமதி உற்பத்திகளை மேற்கொள்ளத் தொடங்கியதுடன், நிர்வாகப் பிரதேசங்களையும் மீள்வரைவு செய்து அங்காங்கு நகராக்க திட்டங்களையும் மேற்கொண்டார்கள். அதனைத் தொடர்ந்து இலங்கையில் நகரசபைகள் 1865யில் ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து நகரசுத்தித் தொழிலுக்காகவும் தமிழகத்திலிருந்து ஏராளமான தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்பட்டார்கள். சுத்திகரிப்பு தொழிலுக்கென்றே விசேடமாக அவர்கள் அருந்ததியர்களைத் தெரிவு செய்தார்கள். காலப்போக்கில் அரச காரியாலயங்களுக்குமாக சுத்திகரிப்பு தொழிலுக்காக அருந்ததியர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். இலங்கையில் எங்கெல்லாம் நகரசபை, பிரதேச சபைகள் நிறுவப்பட்டனவோ எங்கெல்லாம் அரச கட்டடங்கள் நிறுவப்பட்டனவோ அங்கெல்லாம் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். ஏனைய நகரங்களிலும், மலையகத்திலும் கூட பரவலாக அவர்கள் குடியிருத்தப்பட்டார்கள்.

நகரத்தின் ஒரு ஓரத்தில் ஏதாவது ஒரு மோசமான சதுப்பு நிலத்தில் அவர்களுக்கு கொட்டில்களை அமைத்து கொடுத்தார்கள். இன்று நாம் மோசம் என்று கூறும் மலையகத்தில் உள்ள லயன் காம்பராக்கள் அளவுக்கு கூட வசதிகள் அற்ற வாழ்க்கை முறைக்குள் அவர்கள் கிடத்தப்பட்டார்கள். கொழும்பாயிருந்தாலும் சரி, யாழ்ப்பாணம், கண்டி, திருகோணமலை, காலி, அனுராதபுரம் எந்த இடங்களாக இருந்தாலும் இதேநிலை தான். அவர்கள் நாடளாவிய ரீதியில் சேரியை ஒத்த பல குடியிருப்புகளில் குடியமர்த்தப்பட்டனர். நகராக்கம் விரிவடைய விரிவடைய இவர்களின் குடியிருப்புகளின் பெறுமதியும் அதிகரிக்கப்படுகின்ற போது அந்த நிலத்தை அரசு கையகப்படுத்திக்கொண்டு அவர்களை மேலும் எடுத்த எல்லைக்கு தள்ளிக்கொண்டு போய் இருத்தியுள்ளனர்.

சில குடியிருப்புகள் அப்படியே நூறாண்டுகளுக்கு மேல் அதே நிலையில் இருக்கின்றன. அரசாங்கமும் அதனை மேம்படுத்தாது. அதனை மேம்படுத்த இம்மக்களுக்கு வசதியும் கிடையாது, அனுமதியும் கிடையாது. தமது காவல் தெய்வங்களான முனியாண்டி சாமியையும், சுடலைமாடன், மாடசாமி போன்ற சிறு தெய்வ வழிபாடுகளுடன் அந்த குடியிருப்புகளிலேயே அடிப்படை வசதிகள் குறைந்த வாழ்க்கையை தொடர்ந்து வருகின்றனர்.



ஒடுக்கப்பட்ட கடைக்கோடி தலித் சமூகத்தை சேர்த்தவர்கள் என்பதால் அவர்களை சாதிப் பெயர் கொண்டே பலரும் அழைத்தனர். குறைந்தபட்சம் சக இந்திய வம்சாவளி மலையக சமூகத்துடனான திருமண பந்தங்களைக் கூட வைத்துக்கொள்ள முடியாத அளவுக்கு சாதியம் பிளவு படுத்தியிருந்தது இம்மக்களை. எனவே அகமண முறைக்குள்ளேயே வைக்கப்பட்டார்கள். தமது சமூகத்துக்குள் மாத்திரமே திருமண பந்தத்தை பேணிக்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். நகரசுத்தி குடியிருப்புகள் இலங்கையில் எங்கெங்கே இருக்கிறதோ அந்த குடியிருப்புகளோடு தமது தொடர்பு வலைப்பின்னலை பேணிக்கொண்டார்கள். தொடர்போ உறவு முறையோ இல்லாவிட்டாலும் கூட அந்த வலைப்பின்னலுக்குள் தமது திருமண பரிமாற்றங்களை செய்துகொண்டார்கள். இதையே பல ஆண்டுகளாகப் பேணி வருகிறார்கள். மாத்தளையிலுள்ள மணமகன் களுத்துறையில் முடிப்பார் அல்லது கொழும்பிலுள்ள ஒருவர் பதுளையில் திருமணம் முடிப்பார், அனுராதபுரத்திலுள்ளவர் புத்தளத்திலேயோ காலியிலேயோ திருமணம் செய்துகொள்வார்கள். இந்த உறவுமுறை இந்த வலைப்பின்னலுக்குள் தான் அடங்கியது.


சாதியமைப்பு நிர்ப்பந்தித்த இந்த அகமண வாழ்க்கை முறை அவர்களின் குழுவாத வாழ்க்கை முறையை தக்கவைத்து வந்தது. இலங்கையில் அதிகமாக சாதிய வசைபாடலுக்கும், சாதிய அவதூற்றுக்கும் அதிகமாக ஆளாகி வரும் சமூகம் இந்த சமூகமே.

சமூக இயக்கங்கள்
மலையகத்தில் வளர்ந்த தொழிற் சங்கங்களைப் போல இவர்களுக்கான தொழிற்சங்கம் எதுவும் இருக்கவில்லை. அந்தந்த பிரதேசங்களில் தொழிற்பட்ட தொழிற்சங்கங்களில் அங்கத்துவம் பெற்றவர்களாக இருந்தார்கள். மலையகப் பகுதிகளில் இருக்கும் நகர சுத்தித் தொழிலாளர்கள் பெரும்பாலும் இ.தொ. காவில் அங்கத்துவம் வகித்தவர்கள். ஆனால் பல சமூக இயக்கங்களை கட்டியெழுப்பினார்கள். அருந்ததியர் மகாஜன சங்கம் எனும் அமைப்பை 1920லேயே தொடங்கிவிட்டார்கள். அதன் பின்னர் அருந்ததியர் சங்கம், அரிஜன சங்க சம்மேளனம், , அரிஜன யூனியன், தெலுங்கு காங்கிரஸ் போன்ற இன்னும் பல அமைப்புகளை வைத்து இயங்கி வந்திருக்கிறார்கள். இந்த அமைப்புகள் நகர சுத்தி தொழிலாளர்கள் வாழ்ந்த பல குடியிருப்புகளுக்கு சென்று பணியாற்றியிருக்கிறது. ஆனால் சீர்திருத்த வலைகளுக்கப்பால் அது விரிவடையவில்லை.

இவை எதுவும் அரசியல் இயக்கமாக வடிவமெடுக்கவில்லை. பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட தெலுங்கு காங்கிரஸ் போன்ற அமைப்புகள் கூட இம்மக்களை விற்றுப்பிழைத்து பின் அழிந்தே போனது.

ஆக பிரதேச கட்சிகளோடு தம்மை இணைத்துக் கொண்டனர் அல்லது தேசிய கட்சிகளுக்கு ஆதரவளிப்போராகவே பெரும்பாலும் இருந்து வந்துள்ளனர். எனவே குடியிருப்பு போன்ற பெரிய பிரச்சினைகளை கோரிக்கையாக வைக்குமளவுக்கு அரசியல் பலம் கொண்டவர்களாக இருக்கவில்லை. மேல்மாகாணத்தைப் பொறுத்தளவில் தற்போது மனோ கணேசனுக்கு இவர்கள் மத்தியில் பெரும் செல்வாக்கு காணப்படுகிறது.

மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவின் பால்ய காலத்து நண்பர்களாக அவரின் பிறப்பிடமான வாழைத்தோட்டப்பகுதியில் சூழ்ந்து வாழ்ந்த அருந்ததியர்கள் இருந்தார்கள். ஒடுக்கப்பட்ட சமூகத்தை சேர்ந்த பிரேமதாசவுக்கு ஒடுக்கப்பட்ட அருந்ததியர்களை விளங்கிக்கொள்வதில் கடினமாக இருக்கவில்லை. பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக இருந்த காலத்திலும் அவர் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் அனுராதபுரம், மாத்தளை ஆகிய இடங்களில் இருந்த நகர சுத்தித் தொழிலாளர்களின் சேரிகளை வீடமைப்பு திட்டங்களின் மூலம் கல் வீடுகளைக் கட்டிகொடுத்து அவர்களுக்கு சொந்தமாக்கினார்.



ஏனைய இடங்களில் மலையகத்தில் உள்ளது போலவே இவர்களின் குடிசைகள் இவர்களுக்கு சொந்தமில்லை. நகர சுத்தி தொழிலில் இருக்கும்வரை தான் அவர்கள் அந்த குடிசைகளில் இருக்கலாம் என்கிற விதி இருந்தது. ஆனால் அவர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் பலாத்காரமாக குடியேறிய பெரும்பான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் தமக்கான குடியிருப்புகளை வளப்படுத்திக்கொண்டும், அவற்றுக்கான வீட்டு உறுதிகளையும் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஆனால் இவர்கள் வாழ்ந்த குடிசையைப் பேணுவதற்காக தலைமுறை தலைமுறையாக அந்த தொழிலை அடுத்தடுத்த சந்ததிக்கு கைமாற்றும் அவல நிலைக்கு தள்ளப்பட்டார்கள் இந்த தொழிலாளர்கள். அவர்களின் விளிம்புநிலை வாழ்க்கை உரிய கல்வி தரத்தையும் எட்டமுடியாதபடி வரையறுக்கப்பட்டிருந்தது. அப்படியும் தப்பித்தவறி போராடி கற்று தேர்ந்தவர்கள் அந்த குடியிருப்பை விட்டு வெளியேறினார்கள்.

என்.சரவணன்

அது அவர்களை சாதிய அடையாளத்திலிருந்து சற்று விடுவித்தது என்றும் கூறலாம். முடிந்தவர்கள் வெளியேற, முடியாதவர்கள் இன்றும் அந்த சேரி வாழ்க்கைக்குள் அகப்பட்டுப் போயிருக்கிறார்கள்.

அவர்களுக்குத் தான் இன்று குடியிருப்புக்கான தீர்வு தேவைப்படுகிறது. சாதிய வசவுகள் காரணமாக தமது அடையாளத்தை முன்னிறுத்தி ஒரு அரசியல் சக்தியாக உருவெடுக்க இயலவில்லை. குறைந்த பட்சம் இருந்த சமூக இயக்கங்களைக் கூட காலப்போக்கில் கைவிட வேண்டியேற்பட்டது. இறுதியில் பொதுவான பெயர்களைக் கொண்ட சங்கங்களை உருவாக்கி வேறு சமூகங்களையும் இணைத்து பணியாற்றியபோது தமக்கான நிகழ்ச்சி நிரலை தனித்து செயல்படுத்த முடியாத நிலைக்கு உள்ளானது தான் மிச்சம்.

நாடளாவி பரந்துபட்டு உதிரிகளாக வாழ்ந்து வருவதால் தேசிய கட்சிகளுக்கு மட்டுமல்ல தமிழ் அரசியல் சக்திகளுக்கும் கூட இவர்கள் ஒரு வாக்கு வங்கி அல்ல.

சாதிய காரணங்களால் இவர்களை இணைக்கும் வகையிலான ஒரு அரசியல் இயக்கம் கூட இல்லை. எனவே எவருக்கும் வேண்டப்படாத சமூகமாக நடத்தப்பட்டார்கள்.

மலையக மக்கள் முன்னணி 90களில் மலையகத்துக்கு வெளியில் வாழும் இந்திய வம்சாவளியினரையும் ''மலையக மக்கள்'' என்கிற அடையாளத்துக்குள் ஒன்றிணைக்க வேண்டும் என்கிற கொள்கையைக் கொண்டிருந்தபோதும் அக்கட்சி தமது கட்சியின் இருப்பை தக்கவைப்பதற்கான முனைப்பில் இந்த நிலைபாட்டையும் தவற விட்டது.

இந்திய பின்னணியுள்ளவர்களை ''இந்திய வம்சாவளியினர்'' என்று அழைப்பதா அல்லது ''மலையகத்தவர்'' என்று அழைப்பதா என்கிற விவாதத்தில் கூட இந்த மக்கள் பற்றி கரிசனை கொள்ளப்படுவதில்லை.

ஆங்கிலேயர்களால் அன்று வஞ்சிக்கப்பட்டவர்கள், பின்னர் இலங்கை அரசியல் அதிகாரத்துவத்தால் வஞ்சிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு என்று எந்த அரசியல் தலைமையும் கிடையாது. நாளை இந்திய வம்சாவழித் தலைமைகளாலும் வஞ்சிக்கப்பட்டவர்களாக ஆகிவிடக்கூடாது. இலங்கையில் தமிழர்களுக்கு என்று ஒரு தேசிய கட்சி கிடையாது. அனைத்துமே பிரதேச கட்சிகளாகவே குறுகி இருக்கின்றன. தமிழ் அரசியல் சக்திகள் தமது அரசியல் கோரிக்கைகளுக்கான ஆதரவை பரஸ்பரம் குரல் கொடுக்கும் நிலை இல்லாமல் போய்விட்டது. அந்த வகையில் அருந்ததியர்கள் ஒட்டுமொத்த தமிழ் அரசியலிலிருந்தும் அரசியல் நீக்கம் செய்யப்பட்டவர்களே.

இன்றைய இலங்கையின் சாதிய கட்டமைப்பில் இன்றிமையாத கவனிப்புக்குரிய சமூகமாக அருந்ததியர்கள் காணப்படுகிறார்கள். சமூக மாற்றத்துக்கான செயற்பாட்டாளர்களோ, அரசியல் சக்திகளோ, ஆய்வாளர்களோ ஊடகங்களோ கண்டுகொள்ளாத ஆனால் கண்டுகொள்ளப்படவேண்டிய சமூகமாகவும் அருந்ததியர் சமூகம் ஆளாகியிருக்கிறது. ஒரு வளமற்ற, பலமற்ற, ஆதரவற்ற சமூகம் என்றளவில் தமக்காக தாம் மட்டுமே போராட வேண்டிய துர்ப்பாக்கிய சமூகத்தவர்கள் அவர்கள். அதற்கான திறனற்ற ஒரு சமூகமாகவும் இருக்கிறார்கள் என்றால் அது மிகையில்லை.

இவர்கள் வாழ்ந்த பல பிரதேசங்களில் முன்னர் இருந்த தமிழ் பள்ளிக்கூடங்கள் சிங்கள பள்ளிக்கூடங்களாக ஆக்கப்பட்டதால் சிங்களப் பாடசாலைகளுக்கே போக தள்ளப்பட்டார்கள். இன்றைய புதிய சந்ததி தமிழ் பேசத் தெரியாத, சிங்களம் மட்டுமே பேசத் தெரிந்த சமூகமாக ஆகியிருப்பதை பல குடியிருப்புகளில் நான் நேரடியாகவே கண்டறிந்துகொண்டேன். சென்ற வருடம் களுத்துறையில் நிகழ்ந்த ஒரு பாட்டியின் மரணச் செய்தி விளம்பரம் சிங்களத்தில் மட்டுமே களுத்துறை நகரத்தில் ஒட்டப்பட்டிருந்தது. இந்த நிலைக்கு இந்த சமூகம் தள்ளப்பட்டுள்ளமைக்கு இன்று எந்த தமிழ் அரசியல் சக்தியும் பொறுப்பேற்கப் போவதில்லை. வர்க்க நிலையில் அடிமட்ட வாழ்க்கையை அனுபவித்து வரும் இவர்களை கவனிக்க எந்த நாதியும் இப்போது இல்லை என்றே கூறலாம்.

குடியிருப்புகளில் இருந்து வெளியேறியவர்கள் போக இன்னும் நகரசுத்தி சேரி குடியிருப்புகளில் சிக்குண்டு இருக்கும் அந்த மக்கள் அரசியல் அனாதைகள் இல்லை என்பதை நிருபிக்க வேண்டிய அரசியல் தருணம் இது. குறிப்பாக மனோ கணேசன், அமைச்சர்கள் திகாம்பரம், வேலாயுதம், போன்றோர் இதனை அக்கறைக்குரிய விடயமாக கருத்தில் எடுக்க வேண்டும். இந்தியா வம்சாவளி மக்களுக்கான காணி, வீடு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தில் நகர சுத்தித் தொழிலாளர்களான அருந்ததியர்களும் இணைத்துக்கொள்ளப்பட வேண்டும். இவர்கள் அரசியல் நீக்கம் செய்யப்பட்டதன் அரசியல் சூட்சுமத்தை இதன் நுண்ணரசியலிலிருந்தே கவனிக்கப்பட வேண்டும். இதில் வர்க்க அரசியல், பிரதேச அரசியல், இனத்துவ அரசியல் மட்டுமல்ல சாதி அரசியலும் கலந்தே இருக்கிறது...
வீடு காணி உரிமை பெற்றுக்கொடுக்கும் தீர்வில் இம்மக்களும் உள்ளடக்கப்பட வேண்டும்.


இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினையை மலையக எல்லைக்குள் மட்டுப்படுத்தாது இதன் நுண்ணரசியலை சற்று ஆழமாக பார்ப்பது அவசியம். □

**நன்றி: "நமது மலையகம்"**



## அயோத்திதாசர் சிந்தனை

# இந்துக்களென்போர் சாதி மத சங்கை



வீ. முனிசாமியென்னுமன்பரே தாம் எழுதியுள்ள கடிதம் மிக்க விரிவாயும் வீணாய் சங்கையாயும் யாதொரு பலனுமற்றதாயுமுள்ளது கண்டு வெளியிடாது நிறுத்தி விட்டோம். இந்து மதத்திற்கு மூலபுருஷன் யாரென்றால் ஆரிய மதமென்பார்கள், ஆரியமதத்திற்கு மூல புருஷன் யாரென்றால் அது அனாதியாயுள்ளதென்பார்கள். ஆதியாகவொன்று தோன்றிய பின்னர் அனாதியென்னும் மொழி தோன்றுமா, அனாதியினின்றே ஆதி தோன்றுமா வென்னில் பொய்யிற்குப் பொய் முட்டுக்கொடுப்பார்கள்.

பூமி அண்டவடிவாயுள்ளதால் பௌத்த சாஸ்திரங்களில் பூவண்டமென வரைந்திருக்கிறார்கள். தங்கள் இந்து சாஸ்திரத்திலோ ஒரு அசுரன் பூமியைப் பாயாக சுருட்டிக்கொண்டு போய் விட்டானென்று வரைந்திருக்கின்றீர்களே அது பொருந்தும் பொய்யா, பொருந்தாப் பொய்யா வெனவுசாவில் திகைத்து நிற்பார்கள்.

அந்த வேஷத்தை மெய்யென நம்பியிருப்போரே... கள்ளுக்கடையில் சாதியைக் காணோம், சாராயக்கடையில் சாதியைக்காணோம், கசாப்புக் கடையில் சாதியைக்காணோம், தாசி வீடுகளில் சாதியைக் காணோம்,

பெரும்பாலும் இருளடைந்துவிட்டால் சாதியைக்காணோம். விடிந்து சூரியன் வெளிவந்தபின் சாதிவேஷப்பிலுக்கு மேலும் மேலும் பரவுவதும் தம்மெயொத்த மக்களைத் தாழ்த்தி பேசவுமொக்குமோ வென்னில் மறுமொழி கூற வகையற்று திகைப்பார்கள். அத்தைகையோர் பால் சங்கை புரிவது உமிகுத்தி கை சலிப்பதுபோலாம்.

-மாசி 25 1914

---

## வடு

**வாசகர்களுக்கு...**

வடு பத்திரிகைக்கான கதை, கவிதை, கட்டுரை மற்றும் தகவல்கள் போன்ற ஆக்கங்களையும் விமர்சனங்களையும் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.


தொடர்புகட்கு:

இலங்கைக்கு

vithanyavino25@gmail.com

புலம்பெயர் நாடுகளுககு:

'VADU'

F.D.S.D.S

70, Square des bauves

95140 GARGES LES GONESSE

FRANCE

VADU.WORLD@hotmail.fr

தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் இணையத்தள முகவரி...

www.Thuuu.net



இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் 'வடு' வெளியீட்டின் நிர்வாக ஆசிரியர்

**விதன்யா விநோ**

யாழ்ப்பாணம்


சாதிய 'வடு' அகற்றிடத் துணிந்த நெடும் பயணம் இது..!